உ

# திரிசூலபுர மாகாத்மியம்

இஃது
பாரத்வாஜ
விசுவநாதப்ரஹ்மசாரியால்
மொழிபெயர்க்கப்பெற்று

திருவண்ணாமலை
ஸ்ரீரமணாச்ரம ஸர்வாதிகாரி
நிரஞ்ஜனனந்த சுவாமிகளால்
பிரசுரிக்கப்பெற்றது.

1946

விலை: சாதா அட்டை ... அணா 8
கனத்த அட்டை ... ,, 10

6561a

All Rights Reserved
by the Publisher

Printed at The Jupiter Press, Ltd., Madras for N. A. 72—11-46.

# திரிசூலபுர மாகாத்மியம்

## பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| | முகவுரை | ... | 1 |
| | பதிப்புரை | ... | 4 |
| | கடவுள் வாழ்த்து | ... | 5 |
| க. | க்ஷேத்திரமஹிமை (1) | ... | 7 |
| உ. | க்ஷேத்திரமஹிமை (2) | ... | 11 |
| ௩. | பிருஹத்பலன் வரலாறு | ... | 20 |
| ௪. | பிரளயஜல சோஷணம் | ... | 23 |
| ௫. | இந்திரத்யும்னன் வரலாறு | ... | 28 |
| ௬. | திரிசூலதீர்த்த மஹிமை | ... | 34 |
| ௭. | பாபஹரி மஹிமை | ... | 38 |
| ௮. | கண்வதீர்த்த மஹிமை | ... | 44 |
| ௯. | காலவதீர்த்த மஹிமை | ... | 47 |
| க0. | கோடிதீர்த்தம் முதலியவற்றின் மஹிமை | ... | 51 |
| கக. | பிரமதீர்த்த மான்மியம் | ... | 56 |
| கஉ. | சூலதீர்த்தப் பிரபாவம் (1) | ... | 58 |
| க௩. | சூலதீர்த்தப் பிரபாவம் (2) | ... | 60 |
| க௪. | பன்னககிரியின் வரலாறு | ... | 63 |
| | திருச்சுழி இருப்பிடங் குறிப்பிடும் படம் | ... | 67 |
| | சுற்றிலுமுள்ள மூர்த்தி தீர்த்தங்களை விளக்கும் படம் | ... | 68 |
| | பாடல்கள் | ... | 69 |

ஸ்ரீ

சிவமயம்

ஸ்ரீ குருநாதன் றுணை

# முகவுரை

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனுகிய முழு முதற் பொருளாம் பரமேசுவரன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஸகளீகரித்துத் திருக்கோயில் கொண்டெழுந் தருளும் நம் பாதகண்ட க்ஷேத்திரங்களில் சமய குரவர் களால் பாடல் பெற்றுச் சிறந்து விளங்குந் தென்னுட்டுத் தலங்கள் பலவற்றுள் பதினன்கு பதிகள் கொண்ட பாண்டி நாட்டினிருதயமா யிலகுவது திருச்சுழியல். ஊழிதோறும் வேதங்களையும் தருமத்தையும் தாங்கிப் பரிபாலிக்கும் எம்பெருமான், இத்திருச்சுழியலில் தமது தேவியாருடன் யுகங்கள்தோறும் வெவ்வேறு நாமம் தாங்கி நிற்கிறர். இந்த யுகத்தில் ஸஹாயவல்லி யம்மையுடன் திருமேனி நாதனெனுந் திருவுருக் கொண்டு வேண்டுவார் வேண்டு வன தந்து விளங்குகின்றுர்.

சிவ பெருமானின் மகிமையைக் கூறுவன சிவ பூரா ணங்கள் பத்தும் அவற்றின் உபபுராணங்களுமாம். அவற் றுள் திருச்சுழியலின் மகிமை ஸ்காந்த புராணம் க்ஷேத்திர கண்டத்துள்ளது. இம் முதனூல் கொண்டு திருச்சுழியல் வாசியாயிருந்த ஆராவமுதாசாரியார் அழகிய செய்யுள் நடையில் திருச்சுழியற்புராண மாக்கியளித்தனர்; திருநெல் வேலி அம்பலவாண நாவலர் ஈசன் சுந்தரமூர்த்திக்கருளிய

காரைக்காலம்மையார்காட்சிச்சருக்கத்தைப் பெரிய புராணத்தை யொட்டிப் பாடி முடிவிற் கூட்டியுள்ளார்.

இவை வடமொழியிலும் செய்யுள்நடையிலு மிருப்பதால், உரைநடையி லிருப்பின் கற்றோரோடு மற்றோரும் ஓதி யுணரத் துணையாகு மென்று கருதி, திருச்சுழியிற் றோன்றி சிவத்தொண்டாற்றி ஜீவன்முக்தன் தொண்டே சிவத்தொண்டெனப் பணி யாற்றிவரும் ஸ்ரீமத் நிரஞ்ஜனானந்தசுவாமி ஸ்ரீ ரமண பகவானின் அன்ப ரொருவர் மூதனூல் வழிநூல் தழுவி வசனநடையி லாக்கிய இத் திரிசூலபுர மாகாத்மியத்தை வெளியிட்டுள்ளார்.

இதனுள் தல மூர்த்தி தீர்த்த மகிமை யிலகுவதுடன் கௌதமர் தவமுகந் தாண்டவன் தாண்டவ மணக் காட்சி தந்த விவரமும், உமை நந்திக்கருளிய வரலாறும், பிருஹத்பலன் பிரமஹத்தி நீங்கப்பெற்ற விருத்தாந்தமும், இந்திரத்யும்னன் பொருட்டு பிரளயத்தி லித்தலத்தைப் பரமன் திரிசூலத்தாற் றாங்கிய சரிதமும், உமாதேவியின் வேண்டுகோட் கிணங்கி பரமேசுவரன் சூலதீர்த்தங் கண்டருளிய கதையும், கௌண்டின்யரின் தோத்திரத்துக் கிரங்கிப் பரமன் கங்கையை அங்கு பாயச் செய்த பான்மையும், பிரதி மாசி மகத்தும் பிரளய தீர்த்தம் பொங்கும் விந்தையும், கண்வரின் உக்கிரத் தவ விளக்கமும் மற்றும் பற்பல அற்புதங்களும், படிப்போர் மனங் கவர்ந்து, அவர்களைப் புள்காங்கிதராக்கிப் பத்திவலையிற் படுத்துவதை அன்பர்கள் அனுபவத்திற் காண்க.

பெரிய புராணத்துக் கூறப்படாது காரைக்கால்அம்மையார்கோயிற் புராணத்துக் காணப்படுவதாய ஓர் சரிதம் வியக்கத்தக்கது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருமேனிநாதர் வலிய வழைத்துக் காரையாராகக் கனவிற் காட்சி தந்து, அந்தண

ராய் வந்து அன்னமிரந்து, அவர் அளிக்கவிருந்த விருந்தை அவர் காணுது கொண்டு, தம்மையவர் பின்பற்றிவரச்செய்த கருணையைக் கண்டு அன்பர் களிப்பர்.

இந்நூலிறுதியில் தென்னிந்தியாவில் திருச்சுழி இருக்குமிடத்தைக் குறிக்கும் படமும் சுழியலைச் சுற்றி எட்டுத் திக்கிலுமுள்ள மூர்த்தி தீர்த்தங்களைக் குறிக்கும் படமும் திருச்சுழியலில் சுந்தரர் பாடிய பதிகங்களும் மணிவாசகர் திருக்கோவையாரில் சுழியலைக் குறித்துக் கூறியதும் ஸ்ரீரமணபகவான் திருச்சுழிநாதன்மீ தருளியதும் கணபதி முனிவர் அருளிய தேவியின் துதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் போற்றப்பெற்ற இத்திருச்சுழிநாதன், உயர் ஞானியாம் மூத்தன் ரமணனைத் தன்னிடம் தோற்றுவித்து, மதுரை மீனாக்ஷியம்மை மடியிற் சீராட்டிப் பாராட்டிச் சின்மயமாம் அருணாசலத்துக் களித்து ஆன்மாக்களையாட்கொண்ட காரணத்தாலும் இம்மான்மியம் நம்மவருக்கு நல்விருந்தாகும்.

வெண்பா

அவனிக் கணிகலமா மண்ணு மலைவாழ்
தவஙல் ரமணனைநீ தந்தாய்—சிவனே
யுருக்கொண் டுதித்தா னுலகுய்ய வுன்பாற்
றிருச்சுழியே சீருனதே சீர்.*

சுந்தரேசன்

---

*இஃதோரன்பர் புகன்ற புகழுரை.

# பதிப்புரை

திருச்சுழி ஸ்தானிகர் தெய்வசிகாமணி பட்டரிடம் வடமொழி ஸ்தல மாகாத்மியத்தைப் பற்றி வினவ, அவரா லளிக்கப் பெற்று, விசுவநாதபிரஹ்மசாரியாற் றென் மொழித் திருச்சுழியற்புராணக் குறிப்புகளுடன் தமிழி லெழுதப் பெற்று சுந்தரமந்திரத்திற் படிக்கப் பெற்ற இந்தத் திரிசூலபுர மாகாத்மியத்தைச் செவிமடுத்த பக்தர்கள், இஃதச்சிடப்பெறின் பலர்க்கும் பயன்படுமென விரும்பியவா றிப்பதிப்பு வெளிவந்தது.

நிரஞ்ஜனனந்த சுவாமி

ஸ்ரீ

# திரிசூலபுர மாகாத்மியம்

## கடவுள் வாழ்த்து

1. திசைக் கோடி யானைக் கூட்டத்துட னுற்ற விளையாட்டுச் சண்டையில் இருபெருங் காதுகளின் அசைவால் வீசிய பெருங்காற்றுத் திரளாலே திக்பாலர்களாய தேவாதிபர்களைத் திசைகளிற் சிதறச் செய்பவனும், லீலையால் இயற்றப்பெற்ற மூவேதத் துட்பொருளாயவனும், சுழியற் பதியிற் கோயில் கொண்டவனும், ஸ்ரீ பார்வதி தனயனுமாம் யானைமுகனை வணங்குகிறேன்.

2. சுழியற் பதியின் மத்தியிலுறைபவனும், அடி நடு முடிவற்றவனும், வானவராற் பணியப்பெற்றவனுமாம் திரிசூலபுர நாயகனை நமஸ்கரிக்கிறேன்.

3. ஞானசக்தி ஸ்வரூபனும், அஞ்ஞான விஷயத்தை மாய்ப்பவனும், கோபுர வாயிலில் வசிப்பவனுமாம் குகதேவனை ஆசிரயிக்கிறேன்.

4-5. பூமி தேவியாலும் பூசுரர்களாலும் பணிந்து வழிபடப் பெற்றவனும், புன்னைவனவாசனும், புஷ்பாம்பிகாபதியுமாம் பூமிநாத லிங்க வடிவ விபுவைப் போற்றுகிறேன்.

6. புவனேசன் மனத்தைக் கொள்ளைகொளும் உயர் கொங்கை நிறைவினளாம் இறைவியும், வீணையும் கிளியும் ஏந்தியவளுமாம் சுழியற்பதி நாயகியை வணங்குகிறேன்.

7. திரிசூல நகரத்தையும், சூலத்துதித்த பொய்கையையும், ஸஹாயவல்லியையும், திருமேனிநாதனையும் வணங்குகிறேன்.

8. ஸஹாயவல்லிஸமேதனும், அத்துணைவியின்பால் ஆவல் மிகவுற்றோனும், அனைத்துலகிற்குந் துணையாய் நிற்பவனுமாம் வானவர்கோமானை என்றும் பணிந்து வணங்குகிறேன்.

9. திருமிகும் அவனியிற் புன்னைவனத்தி லுறைபவனும், திருமிகு பூமிதேவி வணங்கும் பதகமலத்தினனும், திருவார் பூமிதீர்த்தக்கரையி லிருப்பவனுமாம் திருமேனிநாதனை வணங்கிப் பணிகின்றேன்.

10. ஒரு பாதத்தைச் சற்றே யுயரத்தூக்கி மற்றதைப் பூதலத்தி லூன்றிப் புயங்களைப் பலவாறு விரித்துக் கையினால் உடுக்கை யடித்தவாறு அம்பிகையின் வதன கமலத்தைக் கண்டுவகை பொங்கும் புன்னகையுடன் கனகசபையில் என்றுந் தாண்டவ மாடும் நர்த்தகன் எங்களைக் காக்க.

# திரிசூல்புர மாகாத்மியம்

## அத்தியாயம் (க)

## க்ஷேத்திர மகிமை (1)

தேவ தேவனும் உலக குருவுமாம் உமாநாதனைத் தியானித்து சௌனகாதி முனிவர்கள் சூத குமாரரை வினவினர்:

முனிவர்கள்:—"சூத மஹாத்மாவே! புண்ணிய பூமியாம் இப்பாரத தேசத்தில், மங்களகர மாயதும், பாப மனைத்தையும் நொடியில் ஒழிப்பதும், பல்வகைப்பேறுகளை யளிப்பதும், ஸத்கர்மங்களின் பலனைக் கைகூட்டுவதும், மலைமகள் கணவன் கணங்களா லர்ச்சிக்கப்பெற்று என்று முறைவதுமாம் ஒப்பற்ற நலன் வாய்ந்த சிவக்ஷேத்திரம் எதுவென்று எங்களுக் கருளுங்கள்."

சபையிற் பூஜிக்கப்பெற்று, இவ்வாறு வினவப்பெற்ற முனிவராம் சூதர் அம்முனிசிரேஷ்டர்களுக்குப் பரிவுடன் இவ்வசன மருளினர்.

ஸ்ரீசூதர்: "அந்தணப் பெரியோர்களே! முனிவர்களே! உலகில் அகில ஜீவர்களின் நன்மையின் பொருட்டு நல்லதோர் விஷயத்தை நீங்கள் பிரஸ்தாபித்தது மிகமிக நன்று. நீங்கள் யாவருமே எல்லாமறிந்தவர்கள்; ஆகம மனைத்தின் கரை கண்டவர்கள். ஆயினும், என்னைக் கௌரவிப்பதற்காகவே இவ்வாறு வினவினீர்கள். ஆதலின், சிவக்ஷேத்திரங்கள் எங்குந் திகழும் இப் பாரத தேசத்திலே பாபமொழிக்கும் பவித்திர க்ஷேத்திரத்தைக் கூறுகிறேன்"

என்று கூறி முனிவரர்கள் யாவரையுங் கைகூப்பி வணங்கிப் பராசரசுதனும் பராற்பரஜகத்குருவுமாம் வியாஸ பகவானை நமஸ்கரித்து, முக்கண்ணனும் பிறைசூடியும் பார்வதி நாயகனும் சம்புவும் அன்பர் விரும்புவதை யளிப்பவனும் போக மோக்ஷங்களை யருள்பவனும் சாந்தனும் சதாசிவனும் கைலாஸசிகரத் துறைபவனும் காமாரியும் காலகாலனுமாம் பகவான் மஹாதேவனை இதயத்தே தியானித்து, அந்தத் தியான பரவசராய், மேனி சிலிர்க்க, ஆனந்த பாஷ்பம் பெருக உரைத்தார் :

ஸ்ரீ சூதர்: "நைமிசாரண்ய வாசிகளாம் முனிவர்களே! கேளுங்கள். கேட்டமாத்திரத்திற் பாபமனைத்தையும் போக்குவதும், புண்ணியத்தைச் சேர்ப்பதும், எல்லாவுலகினும் ரகசியமாயதுமாம் ஒப்பற்ற பாவன க்ஷேத்திரமொன்று பாண்டிய தேசத்தில் மதுரை மாநகருக்குத் தெற்கே மூன்று யோஜனை தூரத்தில் உளது. அப்பெருந்தலம் புன்னைவனம், சுழியல் (ஆவர்த்தபுரம்), திரிசூலபுரம், புவனேச்வரம், காளீச்வரம்* என்னும் பெயர்களால், அதனுண்மையுணர்ந்தோரால் வழங்கலுற்று, மூவுலகினும் பிரசித்தி பெற்றது. சித்தி யனைத்திற்கும் ஆதாரமாயவனும், எல்லாவுலகுந் தாணுவுமாம் பார்வதிநாதன், மஹாதேவன், லிங்கரூபியா யங்கே யிலகுவன். மகா பாபங்களை யொழிப்பதும், மகா மங்களத்தை யருள்வதும், எல்லாத் துயரையும் இன்னலையுந் துடைக்கத் துணையாவதும், வானவர் வழிபடுவதுமாம் அத்தலத்திற்கு நிகர் உலகிலென்றுமில்லை. ஈசனருளாலே தவப் பயன் அங்கே விரைவிலெய்தும். அங்கே செய்யப்படும் தானம், ஜபம், ஹோமம், பூஜை, யாகம் முதலாங் கிரியைகள் யாவும் நலன் பல பயப்

---

* முத்திமாநகர், வயலூர் முதலியன புராணத்துள்ளன.

பனவாம். தெண்ணீர்ப் பெருக்குடனே தனியே கடலை நாடிச் செல்லும் மங்களகரமான கௌண்டின்ய நதி அதன் வடக்கே யிருந்து பிரவகிப்பதாய் லிங்கத்திற்கு முன்னே தெற்கு நோக்கிப் பாய்கிறது. இருபுறமும் பல்வகை மரஞ் செடி கொடிகளும் புள்ளினங்களும் நிறைந்த அவ்வாற்றின் தென்பால், புன்னைவனம் அணிசெயும் புண்ணியப் பிரதேசத்தில் உத்தமத் திருப்பதியாம் சுழியல் உளது. அவ்விடத்தே, தானே யுண்டானதும், லிங்க மனைத்திற்கும் ஆதாரமாயதும், அடிநடு முடிவற்றதும், தெய்வமுதொன்மையதும், ஆகமங்களேத்தும் அத்வைத நிர்க்குண நிர்மல ஸச்சிதானந்த வடிவதுமான ஒப்பற்ற சிவலிங்கம் பூமிநாதனென்னும் பெயருடன் திகழும். தேவாதிபனும் கௌரீபதியுமாம் அவ்விறைவன் கிருதயுகத்திற் பிரளயருத்ரனென்றும், திரேதா யுகத்திற் பூமிநாதனெனவும், துவாபர யுகத்திற் கல்யாணசுந்தரனென்றும், கலியிலே திருமேனிநாதன் (ஸ்ரீதனுநாதன்) என்றும் முனி சிரேஷ்டர்களால் அழைக்கப்பெறுவான். கோடி மன்மத சுந்தரனும் அந்த ஜகதீசனது தேவி நான்கு யுகங்களிலும் முறையே மாணிக்ய மாலை, முத்து மாலை, ஸ்வர்ண மாலை, புஷ்ப மாலை என்னும் பெயர்களுறுவாள்.* தேவேசனும் விபு இவ்வாறங்கே லிங்கவடிவுடனிருக்கிறான். ஆற்றுக்கும், லிங்கத்திற்கும் இடையேயுள்ள அத்தலம் காசிக்கு நிகரெனக் கருதப்படும். அங்கே பாபத்தோ டிறந்தாரும் முத்தியுறுவர். அவ்விடத்தியற்றப்படும் யாகாதி கர்மங்களெவையும் ஆயிரம் பங்கு பயனுடையனவாம். பூமிநாத மஹேசனை அங்கே ஓர் முறை வணங்குபவன் பாபத்தினின்று விடுபட்டுப் பரமபதமுறுவன். பிரதோஷ காலத்திற் புவனேச்வரனைப் பக்தி

* புராணத்தில் இப்பகுப்பு காணவில்லை.

யுடன் பணிவோன் ஜீவன்முக்தனே யாவன். திரிசூலபு ரேசனுக்குப் பாலபிஷேகஞ் செய்பவன் பூமியில் எல்லா நலன்களையுந் துய்த்து, முடிவிற் சிவபுர மெய்துவான். ஜாதி, சண்பகம், புன்னை முதலாம் மலர்களால் அவனைப் பூஜிப்பவர் நான்கு புருஷார்த்தங்களையும் பெறுவர்; வில்வ தளங்கொண்டு வழிபடுவோர் மீண்டுந் திரும்புதலிலா சாயுஜ்யம் பெறுவர். அந்தணப் பெரியோர்களே! இத் தலம்போல் ஓர் தலமும் இதனைப் போன்றதோர் லிங்கமும் புவியிலெங்கு மின்மையின், பாபபயமுற்ற மாந்தர் யாவரும் திரிசூலநகரிறைவனை முழு முயற்சியுடன் வழிபட வேண்டும். சுற்றிலும் இரண்டு கோச தூரமுள்ள இந்த க்ஷேத்திரத்தில் வதிபவர் பாபமொழியப் பெறுவர். முனிவர்களே! இனி, க்ஷேத்திரத்தின் எல்லைகளைக் கூறுகிறேன். கிழக்கே கண்வ தீர்த்தம். இதன் கரையிற் கண்வேச்வர லிங்க முளது. தெற்கே மலையத்திக்காடு (கோவிதார வனம்). ஒப்பற்ற கோவிதார லிங்கம் அங்கே யுளது. மேற்கே பன்னககிரி (நாகமலை). வடக்கே உலகப்பிரசித்தி பெற்ற காலவ தீர்த்தம். அதன்கரையில் எல்லா நலன்களையும் நல்கும் காலவ லிங்கம் இலகும்.

இவ்வாறு, இந்த க்ஷேத்திரத்தின் மகிமையைச் சுருக்கமாய்க் கூறினேன். இதனை ஒருமையுடன் கேட்பாரும் படிப்பாரும் பாபக் கூட்டத்தினின்று விடுபட்டு சிவமந்திர முறுவர்.

# அத்தியாயம் (உ)

## க்ஷேத்திரமகிமை (2)

இவ்வாறு சூதர் அருளியதைக் கேட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கி, மகிழ்ச்சியால் மலர்ந்த கண்களுடன் அப்பரம ரிஷிகள் யாவரும் வியாஸ சிஷ்யனும் அந்த ஜிதேந்திரியப் பெரியோனைத் துதித்து மீண்டும் வினவினர் :—

ரிஷிகள் : "சூதரே! மிகவும் ஆச்சரியகரமும், பற்பல விருப்பங்களை நிறைவேற்றுவதும், விசித்திரமுமாய புன்னைவன மாகாத்மியத்தைக் கேட்டோம். உமது முககமலத்தினின்று சிந்தும் ஒப்பிலாக் கதையமுதை யருந்தும் எமக்கு அதன்மீது மேன்மேலும் ஆவல் பெருகுகிறது. அத்தலம் திக்குகளிலும் திக்குக் கோடிகளிலும் எவ்வளவு பிரமாண முள்ளது? அவற்றைக் குறிக்கும் அடையாளங்கள் எவை? அங்கே வசிப்போரின் புண்ணிய விசேஷம் யாது? என்னுமிவற்றை யெல்லாம் தயையுடன் எங்களுக் குரைக்க வேண்டும்."

இங்ஙனம் நைமிசாரண்ய வாசிகளின் வினவலைக் கேட்டு, சூதர் முகமலர்ச்சியுடன் இனியவசன மியம்பினூர் :

ஸ்ரீசூதர் : "முனிவர்களே! கேளுங்கள். இந்த க்ஷேத்திரத்தின் எல்லைகளைக் கூறுகிறேன். கிழக்கே கண்வ தீர்த்தமும், அதன் கரையிலுள்ள கண்வேச்வர மென்னும் பாவனலிங்கமும். அக்கினி திக்கில் காமேச்வரமெனப்படும் லிங்கம். அதைத் தரிசித்த மாத்திரத்தில் எப்போதும் விருப்பங்கள் கைகூடும். தெற்கே கிருதாந்தேச்வர லிங்கம். அதனைக் காண்போன் யமனைக் காணுன். நிருதி* மூலை

---

*இவற்றுள் நிருதி, மாருதேசம் என்பவை இரண்டு மட்டும் சுழியற் புராணத்திற் காணப்படவில்லை. ஆனல் உபய

யில் நிருதி லிங்கம்; அதைப் பார்த்த வளவிற் பேய்களின் இன்னலொழியும். மேற்கே பன்னககிரி. அங்கேயுள்ள †அசலேச்வரனைத் தரிசிப்பவன் அமரரால் வழிபடப்பெற்று வாழ்வன். வாயு மூலையில் மாருதேச லிங்கம். அது எல்லா நோய்களையும் நீக்கி வேண்டுதலனைத்தையும் அருளும். வடக்கே உலகப் பிரசித்திபெற்ற காலவ தீர்த்தம். அதன் கரையில் சர்வாபீஷ்டங்களையும் அருளும் காலவேச லிங்கமுளது. ஈசான திக்கிலுள்ள சோம சேகர‡மென்னும் அமல லிங்கத்தைக் கண்ணுறுமதனாலேயே மனிதன் மீண்டும் பிறவான்.

இவ்வாறு கிழக்கு முதலாம் எண்டிசைகளிலும் லிங்கங்கள் சூழ்ந்த இத்தலத்தே வதியும் மாந்தரின் பற்பல பாபத்திரள்களும் ஒழிவதுறுதி. அங்கே யுள்ள புழுபூச்சி விட்டில்களும், புற்செடி கொடிகளும், விலங்குகளும் பாம்புகளுங் கூட விடுதலை யுறுகின்றன. ஆதலின் பாபபயமுற்றோர் யாவரும் அங்கே வாசம் பூண்டு புவனேச்வரனை மனமார வழிபட வேண்டும். அத் தலத்திலே சூலதீர்த்தம், பாபஹாரிணி, கண்வதீர்த்தம், காலவதீர்த்தம், கோடிதீர்த்தம், பூமிதீர்த்தம், (அனைத்துயிர்க்கும் ஞானமருளும்) அமிர்தவாவி, பிரஹ்ம தீர்த்தம், திரிலோசன தீர்த்தம் என ஒன்பது தீர்த்

---

நதி நடுவே கௌண்டின்ய லிங்கமும், தினகரேச்வர லிங்கமும் கூறப்பட்டுள.

† அது சந்திர வம்சத்தைச் சார்ந்த தத்த பாண்டியனால் நிறுவப்பெற்ற தென்றும், அதன் பெயர் வெள்ளியம்பல நாதனென்றும் புராணம் கூறும்.

‡ ஈசான திக்கில் இலகும் சோமசேகர லிங்கம் சந்திரசேன பாண்டியனால் நிறுவப்பட்டதெனப் புராணத்திற் காண்கிறோம்.

தங்களுள. இவற்றிலே தோய்ந்து திரிசூலநகர நாதனும் சிவனைப் பணிபவன் சங்கையின்றிக் கிருதார்த்தனுவன். அங்கே தர்ம ரிஷபம்* நான்கு யுகங்களிலும் நால்வடிவங் கொண்டு பூமிநாதனைப் பணிந்து வழிபடுகிறது. கிருத யுகத்திற் புன்னை வடிவாய்த் தென்றிசை நின்று, பிரளய ருத்ரப் பெயரிய உமாபதியையும், திரேதையில் மாமரமாய் மேற்கே யுறைந்து பூமிநாதனையும், துவாபரத்தில் வில்வ வடிவாய் வடக்கே யிருந்து ரிஷபத்வஜனும் கல்யாணசுந்த ரேசனையும், கலியில் அரசமரமாய்க் கிழக்கே நின்று திரு மேனிநாதனையும் சேவிக்கின்றது. கிருத யுகத்திற் புன்னை மரத்தடியிற் காசியபரும் பார்க்கவரும், திரேதையில் மாவடி யிற் பரத்வாஜரும் பராசரரும், துவாபரத்தில் வில்வதருவி னடியிற் கௌசிகரும் தேவலரும் கலியில் அரசின் கீழ் கௌதமரும் நந்தியும் பலவாறு தவம் புரிந்து சித்தியையும் சிவ சாயுஜ்யத்தையும் பெற்றனர். கலியிற் களங்கங் களைந்து விளங்கும் அவ்வரசின் பெயர் பத்ராச்வத்தம். அதனடியி லாற்றப்படும் தவம் மிக விரைவிற் பயனளிக்கும். தவமுயர் முனிபுங்கவர்களே! அவ்வச்வத்த மூலத்திற் பரமேசனைத் தவத்தால் ஆராதித்து சித்தி பெற்றோர் எண்ணிலர். ஆத லின், அதனைப்போலே தவப்பயனைக் கூட்டுவிப்பதும், தீவினை யனைத்தையு மொழிப்பதுமான இடம் எங்குமில்லை."

ரிஷிகள்: "சூத குமாரரே! பத்ராச்வத்த தரு மூலத்திற் கௌதமரும் நந்தியும் எவ்வாறு தவநிறை வெய் தினர்?"

---

* தர்மம் நான்கு யுகங்களிலும் நாவல், மா, மகிழ், அரசு வடிவாய் சந்நிதியில் இருப்பன வென்றும், அவற்றி னடியில் தாவரவிநாயக னென்னும் பெயருடன் கணேசன் இலகுவனென்றும் புராண வசனம்.

முனிவர்கள் வினவைக் கேட்டு, சூதர் அகமகிழ்ச்சி யுடன் கூறினார்:—

ஸ்ரீ சூதர்: "முன்னொரு காலம்* கௌதமரென்னும்

---

* புராண வரலாறு பின்வருமாறு:—

இந்திரன் கௌதமரைப்போல் உருமாறி அவர் ஆச்ரமத்தில்லாதபோது அகல்யையை யணுகி அவளுடன் இன்புற்றிருக்குங்கால், கௌதமர் ஆச்ரமந் திரும்பிவிட்டார். இந்திரன் பூனைவடிவு கொண்டு வெளிப்படவே, விஷய முணர்ந்த முனிவர் அவனைச் சபித்தார், பிறகு தன் மனையாளையுங் கடிந்து கல்லாய்ப் போகுமாறு சபித்தார். இந்திரனைத் தன் கணவனென்றே கருதி ஏமாறித் தழுவியதை யுணராது முனிவர் வெகுள்வதைக் கண்ட அகல்யை, "அறிவற்ற முனியே! நிலைமையை யுணர்ந்து அதற்கேற்ற பரிகாரஞ் செய்யாது இங்ஙனம் சபித்தீரே! எப்போதெவ்வாறு எனக்கு விமோசனம்?" என்று வினவ, "ஸ்ரீராமாவதாரத்தின் போது பரந்தாமனது பாத தூளியின் பரிசத்தால் உனக்கு விமோசன முண்டாகும்" என்று முனிவர் அருளினார். அகல்யை உடனே கல்லாய்ச் சமைந்தாள்.

முனிவர் அங்கிருந்தகன்று தமது தினசரியையில் ஈடுபடுங்கால் அவரது புத்தி நிலை கொள்ளாது பலவாறு தடுமாறத் தொடங்கியது. அத்தடுமாற்றம் மேன்மேலும் அதிகமாவதைக் கண்ட முனிவர் சிறிது ஆலோசித்தலும் அதன் காரணம் அவருக்கு விளங்கியது. உண்மையிற் குற்றமறியாத் தம் மனையாளைத் தாம் சபித்தபோது தம்மை யவள் "அறிவற்ற முனியே" என்றழைத்ததே சாபம் போலாயிற்றென்றுணர்ந்து, அதற்குப் பரிகாரம் ஈசனது தாண்டவ தரிசனமொன்றேயாகுமென்றறிந்து, கௌதமர் சிதம்பரஞ் சென்றார். அங்கே, "திருச்சுழியலில் ஆடல் காண்பிப்போம்" என்னும் அசரீரியைக் கேட்ட முனிவர் அவ்வாறே அத்தலத்தை நாடிச் சென்றார். சுழியற்பதியைக் கண்டதுமே

முனிவர் யோகத்திற் கருத்தூன்றியவராய், யாவுமறிந்தவராய், எல்லாங் கண்டவராய், உயிரனைத்தின் நலனில் மகிழ்பவராய், சிவ பக்தராய், உண்மை யுரைப்பவராய், சிவ வழிபாட்டிலீடுபட்டவராய். வேத சாஸ்திரங்களின் நுண்பொருளுணர்ந்தவராய், நிலைத்த மதியினராய், ஞானக்கடலாய் விளங்கியிருந்தார். முத்தியை நாடிய அம்முனிவர் ஒரு காலத்தில் சனகராலே தூண்டப் பெற்று, முத்தி யளிக்கும் பதியாம் சுழியலையுற்று, பத்ராச்வத்தத்தின் அருகே தங்கி, இதயத்தே சதாசிவனைத் தியானித்துத் தவம் புரிந்தார். கோடையிற் பஞ்சாக்னியி னிடையிலும் குளிர்காலத்தில் நீரிலும் மழைகாலத்தில் வெட்டவெளியிலும், பற்பல விரத நியமங்களுடன் உணவின்றிப் பலகாலம் சீரிய தவ

---

கௌதமரின் உள்ளம் தெளியத் தொடங்கியது. அத்தலத்தில் அவர் நீண்ட காலம் தவத்திலமர்ந்தார். இறைவனும் அவரது தவத்திற் கிரங்கி மார்கழித் திருவாதிரை யன்று தனது திவ்யானந்தத் தாண்டவக் கோலத்தை அவருக்குக் காண்பித்தருளினான். கௌதமர் ஈசனை மனமாரத் துதித்து மகிழ்ந்து விடைபெற்றுச் சென்றார்.

உரிய காலத்தில் அகல்யையும் ஸ்ரீராமனது பாததூளியால் மீண்டுங் கன்னிவடி வுற்றுக் கௌதமரை வந்தடைந்தாள். முனிவர் மகிழ்ச்சியுடன் அவளை நோக்கி, "கண்ணுதலின் மணக் கோலத்தை நாமிருவரும் கண்டு களி கூர்ந்து இல்லறந் "தொடங்குவோம்" எனப் பகர்ந்து, அகல்யையுடன் சுழியலுற்றுத் திருமேனிநாதனை வேண்ட, கருணாநிதியாம் சிவபெருமான் அவ்வாறே அவ்விருவர்க்கும் தனது திருமணக்கோலக்காட்சியை யளித்தருளினான். கௌதமர் ஈசனைப் புகழ்ந்து பூஜித்து விடைபெற்று, இடர்யாவும் விலகப்பெற்றவராய்த் தமது மனையாளுடன் என்றும் போல் அமைதியாய்த் தவவாழ்வு தொடர்ந்தார்.

மாற்றினார். கௌதமரது தவத்தால் மகிழ்ந்து, தேவி யுடன் இறைவன் அவர் முன் தோன்றினான். பகவான் மஹாதேவனைக் கண்டு கௌதமர் உள்ளம் பூரித்து வணங் கிக் கைகூப்பி நின்றார். முகமலர்ந்த முனிவரை நோக்கி, சர்வேச்வரன், "கௌதம! உனது தவத்தால் மிகவும் சந்தோஷமடைந்தேன். உனக்கு நலனுண்டாகுக. வேண் டிய வரத்தைக் கேள்; கொடுக்க முன் வந்துளேன்" என்றருள, சம்புவின் அவ்வாக்கைக் கேட்டு, உவகையுடன் கௌதமர், "பரமேசா! திருவுளம் அவ்வாறாயின், முத்தியை எனக்கருள். சாதுக்களை விடுவிப்பவன் நீ யன்றோ!" எனப் பகர்ந்தார். ரிஷபத்வஜனும் புன்னைவனத் திறைவன் கௌதமர் மொழியைக் கேட்டு, மீண்டும் முமுக்ஷுவாம் அவரை நோக்கி, "விப்பிர சிரேஷ்டா! அவ்வாறே யாகுக. சம்பூரண முத்தியை நீ சுவேதவராக கல்ப முடிவில் அடைவாய். கன்மத்திரளை யறுக்கும் தூய அத்வைத ஞானம் எனதருளால் உனக்குண்டாம்" என் றருளினான். அதைக் கேட்ட கௌதமர் சங்கரனை நோக்கி, "முன்பு, சிதம்பரப் பதியில் கனகசபையில் வியாக்ர பாதாதி முனிவர்களுக்குத் திவ்யானந்தத் தாண்டவங் காண்பித்தாய். நானதைக் காணப்பெற்றிலே னாதலின், இறைவ! அவ் வானந்தத் தாண்டவத்தைத் தயையுடன் எனக்குக் காண்பித்தல் வேண்டும். அதைக் கண்டால் முத்தியை யிப்போதே யடைவேன். பிரமானந்த மளிக் கும் நினது கல்யாணசுந்தரத் திருமேனி யழகையும் எனக் குக் காட்டவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

முறுவலுடன் கௌதம முனியைப் பார்த்து சந்திர சேகரன், "அவ்வாறே யுனக்குத் தாண்டவத்தையும், கல்யாணசுந்தர வடிவையுங் காண்பிக்கிறேன்" என்று

மங்களவாக் கருளித் தனது எழிலார் திவ்யானந்தத் தாண்டவத்தை வியாக்ரபாதாதி முனிவர்களுக்குக் காட்டியவாறே காண்பித்தான்; கல்யாணசுந்தர ரூபத்தையுங் காட்டினான். கௌதமர் அதைத் தரிசித்து உவகையுற்று ஜகதீசனைத் துதித்தார். சுழியல் நாயகனும் இவ்வாற வருக்கு வரமருளி தேவியுடனுங் கணநாதர்களுடனும் மறைவுற்றான். கௌதமரும் இறைவன் வாக்கைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஆனந்தத்தாண்டவங் கண்டவாறு அங்கேயே தவத்திலிருக்கின்றார். இவ்வாறுங்களுக்கு நவிலப் பெற்ற கௌதம சரிதத்தைக் கேட்பவர் உடனே பாபக் கூட்டத்தினின்று விடுபடுவர்.

இனி நந்தியின் நற்கதையை யுரைக்கின்றேன். முன்னொருகால் சிலாதனின் புத்திரன் எட்டா மாண்டிற் காலனாற் கழுத்திற் கயிறு வீசப்பட்டுக் காலகாலனும் ஜகத்குருவும் அனைத்துலகின் அடைக்கலமுமாகிய சிவனை இடையறாது நினைந்தான். பசுபாசத்தை நீக்கும் கௌரீசன் அச்சிறுவனால் நினையப் பெற்றதும், தந்தைபோல் அவனைக் காக்க அங்கே யுற்றுப் பாசத்தினின்றும் உடனே விடுவித்து, அவனைத் தன் வாகனமாக்கிக்கொண்டான். தேவதேவனது கருணையினால், சங்கரப் பிரியனும் நந்தி, காளை வடிவு கொண்டு, முக்கண்ணனைத் தன் மீது சுமக்கலானான். ஆனால் மலைமகளாம் இறைவி விசித்திர வடிவுற்ற அக்காளை மீதமர ஒப்பவில்லை. அதனாற் கவலை சூழ்ந்த நந்தி, பார்வதியின் அன்பும் அருளும் தனக் கெவ்வா றெய்துமென் றாலோசித்து, சிவபிரானுத்தரவுப்படி தவம்புரிய ஒப்பிலாத் தலமாம் சுழியலை யுற்றான். தேவீபீடங்க ளனைத்தினுஞ் சிறந்ததும், அற்புத மிக்கதும், தவத்தை நிறைவாக்குவதும், விருப்பனைத்தையும் நல்குவதுமாம் அவ்விடத்தே பத்ராச்

வத்த விருக்ஷ மூலத்திலே, கோரிய வரமருள்பவளும், அருணிறை முகத்தினளுமாம் மாணிக்யமாலா தேவியைத் தியானித்துத் தெளிந்த வுளத்துடன், விதிப்பிரகாரம், தேவிபூஜையில் மனமழுந்தி, ரிஷபராஜன் அரும்பெருந் தவமாற்றினன். சீக்கிரத்திலேயே அவனது தவத்தாற் களிகூர்ந்த அம்பிகை, தேவனுடன் வரமருள அவன் முன் தோன்றினள்.

காந்திமிகு கூந்தலொளிர் சிரத்தினளும், முத்தணி சூடிய எழில் நெற்றியளும், வண்டெனக் கரிய குழலாலழகிய பூரணமதிமுகியும், பொன்மேனியளும், ஒளி சுடர் மாணிக்கந் திகழ் கனக குண்டலத்தினளும், முத்து மாலையிலகுஞ் சங்குக் கழுத்தினளும், முறுவல் பூத்த முகத்தினளும், பொற்கேயூரமொளிர் புயத்தினளும், ரத்னமும் பவளமும் பதித்த கங்கணம் பூண்ட கையினளும், வனமாலையிலகும் எழிலுயர் பெருந் தனத்தினளும், சிற்றிடையினளும், பெரு நிதம்பத்தினளும், மணிமேகலையினளும், பொன்வாழையடி போன்ற துடையினளும், குருவிந்தமணி கோத்த சிலம்பணிந்த சரணத்தாளும், குங்குமம் அகில் கஸ்தூரி கலந்த திவ்ய சந்தனப் பூச்சினளும், ஆனந்த லஹரியால் மெதுவாய் நடக்கும் மலைமகளாம் பாலையும், உலகன்னையுமாம் அம்பிகையைக் கண்ணுற்ற நந்தி உயர்பக்தியுடன் மகேசனைப் புகழ்ந்து, தேவியையும் நன்கு துதித்தான்.

“ உலகின் அடைக்கலமே! சங்கரப்ரியையே! சந்திரனைச் சூடியவளே! மூவுலகின் அன்னையே! திரிபுர சுந்தரி! குமார ஜனனி! குவளை விழியினளே! காமாரியின் பாதி மேனியை அணிசெயும் பூரணி! புவனேச்வரி! மேனையின் அருமை மகளே! அகில பாவனி! கைலாச

வாசினி! கைவல்யதாயினி! பரமகல்யாணி! கமலாய தேக்ஷணி! திரிசூலநகரேச்வரியாம் தேவி! கருணையா லென்னைக் காத்தருள்" என்றிவ்வாறு நந்தியாற் புகழப் பெற்ற அம்பிகை சங்கரி, உள மகிழ்ச்சியுடன், "நந்தியே! இயற்றற் கரிதாம் உனது தவத்தாற் பேருவகை யெய்தி னேன். உனக்கு மங்கள முண்டாகுக. வேண்டுவதைக் கேள்; அருள்கிறேன்" என்றுரைத்தனள். நந்தி களி கூர்ந்து கைகூப்பி வணங்கியவாறு, "அன்னையே! சிவையே! பார்வதி! அவ்வாறாயின் நானுனக்கு வாகன மாக விரும்புகிறேன்; ஏற்றருள்க" என்று வேண்டினான். தேவியும், "கணங்களின் இறைவ! உன் வேண்டுதலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். இனி நீ வருந்த வேண்டாம்" என்று நந்திக்கு வரமருளி, அவ்வாறே அவனை வாகனமாக்கிக் கொண்டு, தேவர்களாலும் ரிஷி களாலும் வழிபடப்பெற்று, நாதனும் சம்புவுடன் மறை வுற்றாள்.

அரசின்கீழே நந்தி தவம்புரிந்த வாலா றிதுவேயாம். இக் கலியுகத்தில் அது பத்ராச்வத்த மெனப் புகழ்பெற் றுளது. காணப் பாபம் விலகுதலாலும், அதனடியில் ஆற்றப்படும் ஜபஹோமாதி கர்மங்கள் யாவும் விரைவிற் பயனளிப்பதாலும் அதுவே சிறந்த தவத்தலம், அதன் கீழேதான் சிவசூலத்தால் நிர்மிக்கப்பெற்ற ஆழமிக்க் பயங்கரத் துவார மிருக்கிறது. அவ்வழியே தான் பிரளய நீர்ப்பெருக்கை வற்றச்செய்து, எண்ணெணுப் பெருமைய னும் மகேசன் பாண்டியராஜனும் பிருஹத்பலனைக் காத்தான். இவ்வாறே, எல்லா யுகசந்திகளிலும், அத்தலத் திறைவனும் பரமேசன், கிருபையினால், தென்னாடு முதலா மிடங்களில் சுழியற்பொந்துகளை யுண்டாக்கி உலகைக்

காக்கிறான். பாபத்தைப் போக்குவதும், அற்புத மிக்கதும் கேட்போர்க் கனைத்து மருள்வதுமாம் சுழியல்மான்மியம் இவ்வாறுங்களுக் குரைக்கப்பெற்றது. ஒருமையுடன் இதனைக் கேட்போரும் புகல்வோரும் பாபத்திரளினின்று விடுபட்டு ஹரமந்திர முறுவர்.

---

## அத்தியாயம் (௬)

## பிருஹத்பலன் வரலாறு

ரிஷிகள் :

"சிவபெருமான் பிரளய வெள்ளத்தை எவ்வாறு பிலத்துவாரத்தில் வற்றச்செய்து பாண்டிய மன்னனும் பிருஹத்பலனைக் காத்தருளினான்? சுழியற்பதியென்னும் பெருந்தலம் எவ்வாறுண்டாயிற்று?"

ரிஷிகளின் இவ்வினாவைக் கேட்டு, சூதர் மகிழ்ச்சியுடன் உரைத்தார்.

ஸ்ரீசூதர் : "பாண்டிய நாட்டில், சந்திர வம்சத்தைச் சார்ந்த பிருஹத்பல* னென்னும் மன்னனொருவனிருந்தான். அவன் பிரஹ்மவிச்வாசமும் தன்னலமின்மையும் ஒழுக்கமும் எல்லா நற்குணங்களும் வாய்ந்தவனாய், அதிதிகளைப் பூஜிப்பவனாய், சிவபக்தனாய், பஞ்சாக்ஷர தியான பாராயணனாய், ருத்ராக்ஷ மணிந்தவனாய், சிவனடியாரை வழிபடுவோனாய், உலகியலில் நால்வகைச் சேனையுடையவனாய்க் கீர்த்தியுடன் பூமியை அறவழியே பரிபாலித்துவந்தான். ஒரு நாள் இராப்போதில் அவ்வரசர் கோமான் நகரசோதனை செய்து ஊரைச் சுற்றி வந்தான்.

---

*புராணத்தில் பராக்ரம வழுதி யென விருக்கிறது.

இந்நிலையில், அவ்வூரில் வசித்துவந்த அந்தணப்பதடி யொருவன், தீயவொழுக்கமும் வேசிகளுறவுங் கொடுமையு மிக்கோன், வேசிக்குப் பணங் கொடுப்பதற்காக யாருங் காணாது, நள்ளிரவில் ஓர் வீட்டுட்போந்து, அங்கிருந்த திரவியத்தை யபகரித்துப் பயமின்றித் திடமாய் வெளியே வந்தான். அதற்குள் அவ்வீட்டார் விழித்துக் கூச்சலுடன் வேகமா யவனைத் துரத்திக்கொண்டு, அரசன் வரும் வழி யுற்றனர். பணத்தைத் திருடிக்கொண்டு ஓடுபவனைக் கண்ட மன்னன் சீற்றத்துடன் அவனைத் தொடர்ந்து பிடித்து, வஜ்ரம் போன்ற வாளை யுருவி அவனது தலையை வெட்டினான். இவ்வாறவ்வரசன் இருட்டிற் பிராமணனென்றறியாது அவனைக் கொன்றதனாற் பிரமஹத்தி யென்னும் மகாபாபத்திற்காளானான். கோரமான கருமைத் திரள் வடிவுகொண்ட அந்தப் பயங்கரப் பிரமஹத்தி அரசனைப் பின்றொடர்ந்தது. கதையும் உலக்கையுங் கொண்ட அப்பயங்கர வடிவைக் கண்டு, அச்சமுற்று மன்னன் ஓடினான். எங்கே போயினும் ஹத்தி அவனை விடாது தொடர்ந்தது. இவ்வாறதனாற் பின்றொடரப் பட்ட அரசன் சிவனை நினைந்தவாறு உலகெலாஞ் சுற்றினான்; புண்ய ஸ்தலங்களெல்லாஞ் சென்றான். ஆயினும், விப்ரஹத்தி அவனைச் சற்றும் விட்டபாடில்லை. இந்நிலையில், அவன், தற்செயலாய் புவனேச்வர மென்னும் பாவன லிங்கம் விளங்கும் புன்னைவனம் வந்துசேர்ந்தான். பற்பல மரங்கள் செறிந்ததும், மகாபாபங்களைக் களைவதுமாம் அவ்வனத்தலத்தினுள் அரசன் நுழைந்ததும், பிரமஹத்தி அத்தலத்தெல்லைக்கு வெளியிலேயே நின்று விட்டது. அதைக் கண்ட பிருஹத்பலன் சந்தோஷம் மிகவுற்று, "இதென்ன ஆச்சரியம்! பெரியதோர் அற்புதங் கண்டேன். என்னைப் பிடித்த பிரமஹத்தி

தொலையே யகன்றதென்விந்தை! இங்கே ஏதோ விசேஷமிருக்கிறதென்பதில் ஐயமே யில்லை" என்றுலோசித்து, மேலும் அவ்வனத்துட் செல்லுங்கால், பாதாள மேழினுக் கடியினின்று பேரொளியாய்த் தோன்றுவதும், எல்லா லிங்கங்களுக்கும் ஆதாரமாயதும், தானோர் ஆதாரமிலதும், சலனமுந் தேய்வு மெல்லையு மற்றதும், அடி நடு முடிவற்ற சச்சிதானந்த ஜோதி வடிவதும், உலகவடி வுறுவதும், தேவர்க்கும் உலகங்கட்குங் கண்ணாயதும், தீவினையாவுங் கடிவதும், போகமோக்ஷங்களை யருள்வதும், முனிவர் குழாத்தால் வழிபடப் பெறுவதும், சித்த சாரண கந்தர்வ வித்யாதரர்களாற் பூஜிக்கப் படுவதும், வருக்கொணாதது மாம் புவனேச்வர மென்னும் அமலலிங்கத்தைக் கண்டு முகத்தாமரை மலர லிங்கரூபியாய், இதோ திகழும் தேவ தேவனும் சம்புவே கோரப்பிரமஹத்தியினின்று என்னை விடுவித்தருளினான் என மனத்துட் கருதினான்.

இங்ஙன மவன் சிந்தை யாழ்ந்திருக்குங்கால், அசரீரி யொன்று, "அரசர் திலகமே! பலமிகு பிருஹத்பல! மஹாதேவனருளால் இப் புண்ணிய பூமியில், நீ கொடிய பிரமஹத்தியினின்றும் விடுதலையுற்றாய்; சந்தேகமே யில்லை. இத்தலத்தின் பெயர் புன்னைவனம். இது மகா பாபங்களை யகற்றி நலனனைத்தையும் அருளும். ராஜபுத்ர! அருளாளனும் இந்துசேகரன் உலகைக் காப்பதற்காக இங்கே வெளித்தோன்றினான். இந்தச் சராசரவுலகைப் படைத்தற்காக ஆதியிலே தேவரனைவராலும் போற்றலுறும் பகவான் சுழியலில் லிங்கவடிவாய்த் தோன்றிய படியாற் புவனேச்வர மென்னும் இத்தலம் அனைத்தினு முயர்ந்த புண்ணியத்ததாம். ராஜசேகர! முன்னர், அம்பிகையின் வேண்டுதற் கிணங்க, ஜலக்ரீடையினிமித்தம்

சூலமுனை கொண்டு தேவதேவனால் நிர்மிக்கப்பெற்றதும் பரம பாவனமுமாம் இத்தீர்த்தத்தைப் பார். பகவானது சூலத்தா லுண்டாக்கப் பெற்றமையின் இவ் வுத்தமதீர்த்தம் சூலதீர்த்தமெனப் புகழ்பெறும். சில முனிவர்கள் இதை சிவதீர்த்தமென்றும் அழைப்பர். ஆதலின், ராஜேந்திர! இங்கே நீ நீராடிக் கல்யாணசுந்தர மகாலிங்கத்தை அன்புடன் வழிபடு" என்றருளியது.

அவ்வாகாசவாணியைக் கேட்டு பிருஹத்பல பூபதி அதிசய மிக வுற்று, பாபவனத்திற்கோர் காட்டுத்தீப் போன்ற திரிசூலதீர்த்தத்தில் மூழ்கி, புவனேச்வரனைப் பூஜிக்க இலைகளையும் மலர்களையுங் கொய்தெடுத்துக் கொண்டு, பக்திப்பெருக்குடன் சம்புவை யணுகி, லிங்க வடிவுகொளிறைவனை சுத்தோதகத்தால் நீராட்டிப் பற்பல மலர்களாலும் வில்வதளங்களாலும் அர்ச்சித்தான்; தேவர் கோமானும் உமாபதியை விதிப்படி வழிபட்டபின் சீரிய பக்தியுடன் துதிக்கத் தொடங்கினன்.

---

## அத்தியாயம் (௫)

## பிரளயஜல சோஷணம்

இவ்வாறு, புத்திமானும் அவ்வரசன் பேரன்புடன் ஈசனைப் பூஜித்தபின், கூப்பிய கையனாய், இறைவனருளாற் பொங்கிய திருவாக்கால் மேனி சிலிர்க்கத் துதித்து மகிழ்ந்தான். பாபத்தை யகற்றி, விரும்பியவற்றை யருளவல்ல அத்துதியை உங்களுக் குரைக்கின்றேன்.

"எவனது நாமம் காதிற் கமுதாய்ப் பாபமனைத்தையுந் துடைக்குந் திறத்ததென உத்தம முனிவரர் உரைப்பரோ,

தூயவனும், தனக்கயலிலனும், அனைவர்க்கும் விளங்குவோனும், புன்னைவனத் துறைபவனுமாம், அவ்விறைவனை ஏத்துகிறேன்.

அனைத்தினுள்ளும் வதிபவனும், யோகிகளாற் சிந்திக்கப்பெறுவோனுமாம் எப்பரமாத்மாவின் வடிவைப் பிரமன் முதலாயினரும் அறிகிலரோ, மறைகளனைத்தும் மேத்தும் அத்தருணேந்துசேகரனைப் புன்னைவனத்துறையும் இறைவனை ஏத்துகிறேன்.

காலபாசம் கழுத்தைச் சுற்றி யிறுக்கியகால், மார்க்கண்டேயன் எவனைப் பக்தியுடன் பணிந்து மரணபய மொழிந்து சுக முற்றானோ, புன்னைவனத்துறையும் அவ்விறைவனை ஏத்துகிறேன்.

அனைத்துலகையும் முடிவிடுமெமனால் எட்டா மாண்டிற் பயமுற்ற சிலாததனயன் எவனை யபிஷேகாராதனை செய்து கணநாத பதவியை யுடனே பெற்றானோ, புன்னைவனத்துறையு மவ்விறைவனை யேத்துகிறேன்.

எவனது நெற்றிக்கண்ணெழுந்த நெருப்புச் சுடாற் பொசுங்கிய காமன், உளந்திருந்தி அனங்கனானானோ, நிர்ப்பயனும் அக்காலகாலனைப் பெண்ணோர் பாதியனைப் புன்னைவனத்துறையும் இறைவனை ஏத்துகிறேன்.

முன்பு கடல் கடைந்தெழுந்த காலகூடவிஷத்தை உடனே கண்டத்தடக்கி உலகைக் காத்த வதனால் நீலகண்டனானவனும், ஆதியந்த மற்றவனும் சரணியனுமாகிய புன்னைவனத் திறைவனை ஏத்துகிறேன்.

எவனருளைப் பெற்ற பிரமன் தேவர் வணங்கும் பதத்தினனாய், அப்போதே படைப்பிற் கதிபதி யாயினனோ, பார்வதியின் இதயகமல பிருங்கராஜனும் அப்புன்னைவனத் திறைவனை ஏத்துகிறேன்.

எவனருளாலேயே, இப்பொழுது, நான் கொடிய பிரமஹத்தியினின்று விடுதலை யுற்றேனோ, பயத்தாற் கலங்கிய அறிவிலியாம் யான் எவனது தரிசனத்தால் மிகத் தெளிவடைந்தேனோ, புன்னைவனத் துறையு மவ்விறைவனை யேத்துகிறேன்."

ரிஷபத்வஜனும் தேவர் கோமானை இவ்வாறு வழுத்தி அந்த ராஜரிஷி, தன்னை மறந்து, ஆனந்தக் கடலில் மூழ்கிக் கூப்பிய கையனாய் ஈசனருகே நின்றான். இத்துதியால் மகிழ்ந்த சங்கரன் பாண்டியமன்னன் முன் வெளிப்படத் தோன்றினன். கருணைக்கடலாம் ஜகந்நாதனைப் பாண்டியன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் தன்னை மறந்திருந்தான். கைகூப்பி மெய் சிலிர்த்திருந்த அவனை நோக்கிப் பக்தவத்ஸலனும் பகவான் கிருபையுடன், "ராஜேந்திர! உனது வழிபாட்டாலுந் துதியாலும் உள்ளமுவந்தேன். வேண்டுவதைக்கேட் டின்புற்றிரு. அருள்புரிய வந்துளேன்" என்றுரைத்தான். சம்புவின் வாக்கைக் கேட்டு, சந்திரவம்சத்தவனும் அவ்வரசன், "கருணாநிதியே! அவ்வாறாயின், நின் சரணாரவிந்தத்திலே திடமான பக்தியை யெனக் கருள். நினதித் தலத்தைக் கண்ணுற்றதனாலே பிரமஹத்தி என்னைவிட் டகன்றது. ஆதலின், மகேச! இங்கேயே வசிக்க விரும்புகிறேன்" என்று பிரார்த்தித்தான். கிருபாசாகரனும் பரமேசன், "ராஜசிரேஷ்ட! நீ விரும்புமாறே என்பாலுனக்குப் பேரன்புண்டாம். இவ்வழகிய தலத்தே ஒப்பற்றதோர் நகரை நிர்மித்துப் பக்தியுடன் அவனி யனைத்தையும் ஆண்டுவா" என்றவனுக்கருளி அமரர் யாவருந் துதிக்க உள்ளத்தைக் கவரும் அந்த லிங்கத்தில் மறைந்தான்.

சிவபக்தனும், சாஸ்திரவிற்பன்னனுமாம் அவ்வரசனும் அவ்வாறே பேருவகையுடன், தனது நகரத்தினின்று

எல்லாப் பிரஜைகளையும் பல்வகைச் சிற்பிகளையும் வருவித்து, நகரை நிருமித்துக் கிழக்கே காளீச்வரனையும், தெற்கே மயில்வாகனனையும், மேற்கே கணேசனையும், வடக்கே துர்க்கையையும்—இவ்வாறு நாற்றிசைகளிலும் க்ஷேத்திர பாலர்களை ஸ்தாபித்து, மகாதேவனது கோயிலை மணிகளால் அலங்கரித்துப் பிராகாரம் கோபுரம் முதலானவைகளையுங் கட்டினான். புவனேச்வரனது வலப்புறத்தேயுள்ள தேவியை வணங்கிப் பலவகைப் பூஜாதிரவியங்கள்கொண்டு வழிபட்டு இதயநிறை வெய்தினான்.

பிருஹத்பலன், இங்ஙனம், அந்நகரில் வாசங்கொண்டு பல்லாண்டுகள் புவியைத் தருமத்துட னாண்டுவருங்கால், யுகசந்தி யெனப்படும் பிரளயந் தோன்றியது. கடல் கொந்தளித்துப் பேரலைகளுடன் அவனியை விழுங்கிக்கொண்டு அதிவேகத்துடன் அந்நகரையும் அழிக்க நெருங்கியது. அதனைக் கண்டு பயந்த சிவபக்தனும் மன்னன் நிசியில் இறைவனது சன்னிதி சென்று, துதிகள் பல செய்து, "மகாதேவ! ஜகந்நாத! பார்வதிரமண! நாசரகித! மகேச்வர! பிரளய ஜல பயத்தினின்றும் எங்களைக் காத்தருள். இத்தலம் உன்னது. இதிலுறைவோர் நின்னன்பர். ஆதலின், அழிக்கவருங் கடலினின் றெங்களைப் பாலித்தருள்" என்று பிரார்த்தித்தான். பக்தர் வேண்டுதலையருளும் இறைவன் நடுக்கமுற்ற பிருஹத்பலனைப் பார்த்து, கம்பீரத்வனியுடன், "அரசரேறே! பிரளயநீர் வெள்ளத்தைக்கண் டஞ்சவேண்டாம். உனது பயம் நீங்க அதனை யான் அடக்குவேன். எல்லோரையும் அச்சுறுத்தி, அதனால் உன்னையும் வருத்துமிது துவாபர கலியுகங்களுக் கிடையே தோன்றும் ஓர் பிரளயம்" என்றருளினான். அவனிவடிவன், காமாரி, உமாபதியாம் பகவான்சம்பு தன் பக்தனுக்காக

கையிற் சூலத்துடன் அந்த லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு வேகத்துடன் முற்போந்து, சூலத்தாற் பூமியைப் பிளந்து, சுழித்துவாரமொன் றுண்டாக்கி, அந்தப் பயங்கர பிலத் துவாரத்திலே தனது நெற்றிக் கண்ணின் அக்னி ஜ்வாலையைச் செலுத்தி, நீர்ப்பெருக்கை வற்ற வைத்தான். பொங்கிய கடனீர் சூலத்தாலுண்டாகிய துவாரத்தில் வீழ்ந்து அமாவாசையிற் சந்திரகலை யென மறைந் தொழிந்தது.*

இவ்வாறு, பிரளயப் பெருக்கினுற் பயந்த பாண்டிய ராஜனையும், அவனது பிரஜைகளையும், நகரையும் ஹரன் காத்தருளினுன். இங்ஙனமே கிருதயுக முதலியவற்றின் நான்கு சந்திகளிலும் தேவர் கோவாம் பகவான் தென்தேச முதலியவற்றிலே தனது சூலத்தாற் சுழியுறுந் துவாரங் களில் அளப்பரிய கடனீரை வற்றவைத்துப் பக்தர்களைக் காத்தருள்கிறுன். சுழியற் பொங்கின் வழியே சமுத்திர ஜலத்தை வற்றச் செய்து, இறைவன் உலகைக் காத்ததனுல் அத்தலம் அதிபாவனமாய்த் திருச்சுழியல் (ஸ்ரீமத்-ஆவர்த்த புரம்) எனப் பிரசித்தியுற்றது. திரிபுராரியின் இந்த லீலை முழுதும் உங்களுக்குரைக்கப்பெற்றது. இதனைக் கேட்கும் மாந்தர் பாபமொழிந்து, சிவத்தை யடைவர்.

ஆதியி லெவன் சூலத்தாற் சுழியற்பொங்கை யுண்டாக்கிக் கடலின் கடுவேகத்தை யடக்கி நகரைக் காத்தருளினனே அத் திரிசூலபுரேசனுக்கு நமஸ்காரம்.

---

* இஃது சந்திரசேன னென்னும் பாண்டியனுக்காக நிகழ்ந்ததென்று புராணம் கூறும்.

## அத்தியாயம் (ரு)

### இந்திரத்யும்னன் வரலாறு

இங்ஙனம், சௌனகாதி முனிவர்கள் புராணமனைத் துந் தெரிந்த சூதரின் வாக்கைக் கேட்டு, மகிழ்ச்சியுற்றவர் களாய், மேலும் வினவினர் :—

ரிஷிகள்: "அறிவு மிக்க பெரியாரே! புன்னைவன மென்று பிரசித்தியுற்ற இத்தலம் சூலபுரமென எவ்வாறு வழங்கலாயிற் றென்பதைப் பணிவிடை புரியுமெங்களுக் கருள வேண்டும்."

பரிபாகமிக்க முனிவர்களின் இவ்வினாவைக் கேட்டு சூதர் அவர்களுக் கருளினார்.

ஸ்ரீ சூதர் :—முனிவர்களே! பாபத்திரளை யகற்றும் திரிசூலபுர மான்மியத்தைக் கேளுங்கள். முன்னர் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் அத்தலம் பல வீடுகளும், மாளி கைகளும், ராஜமார்க்கங்களும், பற்பல உத்யானவனங் களும், தடாகங்களும் நிறைந்து, கலைவிளக்க முற்று, எல்லா வருணத்தாரையும் பல்வகைப் படைகளையுங் கொண்ட நகரமாய் விளங்கியது. அந்நகரில் இந்திரத்யும்ன னென்னும் மன்னன், இந்திரனைப்போல வலியவனாய், உண்மை பேசு வோனாய்ப் புலனை வென்றவனாய், அழகு மிக்கவனாய், நூலனைத்து முணர்ந்தவனாய், திறனும் அமைதியும் ஒளியு முற்றவனாய், ஆக்களையு மந்தணரையுங் காப்பதி லின்புடை யோனாய்த் தானயாகபக்திகளிற் சிறந்தவனாய்ப் பகைவ ரணுகொணாப் பராக்ரமசாலியாய், நல்லொழுக்கத்தனாய், நற்குணராசியாய், சிவபக்திச் செல்வனாய், சிவகதை களி லீடுபட்டவனாய், எல்லோரிடமும் தாக்ஷிண்யமுள்ள வனாய்த் தேவப் பிராமண பூஜகனாய்ப் பாண்டிய மண்டலத்

தைத் தருமத்துடன் பரிபாலித்து வந்தான். இவ்வாறவன் பல்லாண்டுகள் புவியைக் காத்துவருங்காற் சாக்ஷுஷ மன்வந்தரத்தின் பிரளயம் உலகை யழிக்க வந்துவிட்டது. எழுகடல் நீரும் ஒன்றா யெழுந்து நகர்களையும் நாடுகளையும் தீவுகளையும் புவியனைத்தையும் போலக் கொந்தளிப்புடன் விழுங்கியது. இந்திரத்யும்னன் அச்சமுற்று, அமைச்சர், பணியாளர், பெண்டிர், பிரஜைகள் அனைவருடனும் சரணியனும் அருட் பெருக்கினனுமாம் புவனேச்வர மகாதேவனை விரைவிலணுகிக் கைகூப்பி, "பக்தவத்ஸல! சங்கர! காமனைக் காய்ந்தோய்! காலகால! கங்காதர! விரூபாக்ஷ! கௌரீநாத! உலககுருவே! நீலகண்ட! நிர்விகார! நிரஞ்ஜன! கைலாசவாசி! காதலியுட னோர்பாதியாம் கமனீயரூப! புன்னைவன நாயக! நீற்றுமேனிய! பகையற்றோய்! விஷபய மகற்றினோய்! மேலொன்று மில்லோய்! மிகவும் பயங்கரமான பிரளய சமுத்திரக் கொந்தளிப்பினின்றும் எங்களைக் காத்தருள்" என்று வேண்டினான்.

கீர்த்திமிக்க தனது பக்தன் பயத்துடன் தன்னை இங்ஙனந் துதித்ததும், அருளாளனும் புவனேசன் அவனுக்குப் பிரத்யக்ஷமாகி, "ராஜ சிரேஷ்டனும் இந்த்ரத்யும்ன! பிரளய சமுத்திரத்தைக் கண்டஞ்சாதே. இந்நகரையும் உன்னையும் அனைவரையும் இவ்வாபத்தினின்று விடுவிக்கிறேன். மன்னவ! அமைதியா யிரு. பக்தனு முனக்குப் பயமொன்றுமில்லை. உயிரையும் உளத்தையும் என்பால் வைத்த எனதன்பர்க்குப் பிரளய காலத்திலும் அழிவில்லை" என்றருளி, அரசன் பிரஜைகள் பரிவாரங்கள் படைகளனைத்துடனும் அந்நகரை யுயரத் தூக்கித் திரிசூலமுனைமீது வைத்துக் காத்தான். எண்ணுதவனும் திரிபுராந்தகன், அம்பிகாபதியாம் பகவான் பிரளய முடிவில் அவ்வாசனை

வைவஸ்வதப் பெயரிய மனுவாக்கினன். இவ்வாறு உயிர்களின் அகத்தனும் இறைவன் தனதன்பனைக் காப்பதற்காகப் பிரளயத்தினின்றும் அந்நகரை ரக்ஷித்தான். அவ்வற்புதத்தைக் காண, பிரமன் ஸத்யலோகத்தினின்று ஸரஸ்வதி முதலாயவருடனும், விஷ்ணு வைகுண்டத்தினின்று லக்ஷ்மியுடனும், மகாதேவன் காளீச்வரத்தினின்று காளியுடனும் வந்தனர். மகாதேவன் பூமிநாதனது ஈசான திக்கில் தேவர்களாற் போற்றலுற்று வாசம்பூண்டான். லிங்க ரூபியாம் பகவான் தேவியுடனமர்ந்துள அவ்விடம் காளீச்வரமெனப் புகழ்பெறும் பரவனத்தலமாம்.

காளீச்வர லிங்கத்தை எப்போதாயினும் வழிபடுவோர் பாபராசியினின்றும் விடுபடுவர். காளீச்வர க்ஷேத்திரத்தினின்று காளியுடன் பகவான் ஹரன் அவ்விடமுற்று வசித்தமையால் அது காளீச்வர மென்றழைக்கப்படும்.*

* சுந்தரமூர்த்தி நாயனருக்கு சிவபெருமான் காளையுரு (யுவா) வாகக் காட்சி யருளினமையின் அவ்விடம் காளையார் கோயில், சோதிவனம் எனப்படுமென்று புராணங்கூறும்.

சுழியற்புராணத் திறுதியிலும் காளையார்கோயிற் புராணத்தும் விவரிக்கப்பட்டுள்ள சுவைமிக்க அவ்வரலாற்றின் சுருக்கம் வருமாறு :—

சிவ பெருமானது பிரதிபிம்பத்தினின்றுந் தோன்றிய சிறப்புவாய்ந்த சுந்தரமூர்த்திநாயனர் தலயாத்திரை செய்து வருங்காலை மலை நாட்டு வேந்தனும் சேரமான்பெருமாள் நாயனரின் நட்பைப் பெற்று அவருடன் மதுரைமா நகர்க்கெழுந்தருளினர். பாண்டியனும் அவனது மருகனை சோழனும் அவ்விருவரையும் எதிர்கொண்டழைத்துத் தமது விருந்தினராய்க் கொண்டுபசரித்து மகிழ்ந்தனர். சுந்தரமூர்த்தி அங்கயற்கண்ணி பங்கனும் சுந்தரேசனை வழிபட்டுப் பதிகம்பாடி முடிவேந்தரிடம் விடைபெற்றுச் சேரனுடன்

புவனேச்வர காளீச்வர லிங்கங்களுக் கிடையேயுள்ள தலம் காசியைப்போன்ற பாபமொழிக்குந் தன்மையது;

---

தென்னாட்டுத் திருப்பதிகளாம் திருக்குற்றாலம் திருநெல் வேலியையும், ராமேச்வரத்தையும் சேவித்து அங்கிருந்தே ஈழமண்டலத்திலுள்ள திருக்கேதீச்சுரத்தைத் துதித்திருக் குங்கால் முத்திமா நகராம் சுழியற்பதியின் நினைவுற்றார். அவ்வாறே அந்நகரைச் சுந்தரரும் சேரனும் அணுகவும், மக்கள் யாவரும் பேருவகைப் பெருக்குடன் அவர்களை வர வேற்றுபசரித்தனர். திருமேனிநாதனைத் தரிசித்து மன மகிழ்ந்த சுந்தரமூர்த்தி, "ஊனாயுயிர் புகலாய்" என்னும் திருப்பதிகம் பாடி, பக்திபரவச முற்று சேரனுடன் அத் தலத்தே சிலகாலந் தங்கக் கருதிக் கௌண்டின்ய நதிக்கக் கரையிலிலகுந் திருமடத்தில் வாசங்கொண்டார்.

இவ்வாறிருக்கையில் ஓர் நாளிரவு, சுந்தரமூர்த்தி துயில் கொண்டிருந்தபோது சிவபெருமான் திருக்கையிற் பொற் செண்டுடன், திருமுடியிற் சுழியம் பூண்ட ஒப்பிலா எழில் திகழும் ஓர் காளை (யௌவன புருஷன்) வடிவாய்த் தோன்றி "நாமிருப்பது கானப்பேர். நம்மைப் பாடுக" என்று பூவள வாயில் முறுவலுடன் புகலவும், சுந்தரர் சரேலென விழிப் புற்று, வலிய வந்தாளும் இறைவனருட் பெருமையை உன்னி யுன்னி யுருகி, அவ்வற்புதக் காட்சியின் விவரத்தைச் சேர மானுக்குங்கூறி அகமகிழ்ந்தார். அப்போதவ்விடத்தே சுந் தரர் கானப்பேரிறைவன் மீது "தொண்டரடித்தொழலும்" எனத் தொடங்கும் தீஞ்சுவைத் தேவாரப் பதிகத்தைப் பேரன்பு பொங்கப் பாடினார்.

பிறகு, அங்கிருந்து தொலையே யுள்ள திருப்புனவாயி லென்னுந் தலத்திற்கு அவர் புறப்பட நினைத்ததும், இறை வன் தேவியுடன் வேதியவடிவாய் அவருக்குத் தோன்றி னான். "நீர் யார், எங்கிருப்பவர்?" என்று சுந்தரர் அவரை வினவலும், அவர், "மற்றவை பின்னர் மொழிவோம்; பசிக் கன்னமிடும்" என்றார். சுந்தரர் அவ்வாறே உணவு

துன்பத்தை நீக்கிப் பேரின்ப மருள்வது. போக மோக்ஷங்
களை யருளும் அத்தலத்திற்கு நிகர் எங்கு மெப்போது

---

சமைத்து, அம்மறையவரை யழைக்க வெளியே வந்தபோது அவர் மறைந்துவிட்டார்; சுற்றிலுஞ் சென்று தேடியும் அவரைக் காணாது திரும்பி வந்தபோது, சமைத்து வைத்திருந்த உணவு மறைந்துவிட்டதைக் கண்டு, "அண்ணலின் திருவிளையாட்டே இது" வெனத் துணிந்து அவர் வியப்புற்றார். அப்பொழுதே, "ஜோதி வனத்தி லென்னைக் காணாது எங்கே போக நினைக்கிறாய்?" என்று விண்ணொலி யொன்றும் எழுந்தது. அதைக் கேட்ட சுந்தரர், "ஜோதிவனமென்பது எங்குளதோ, எவ்வழியே அவ்விடத்திற்குப் போவதோ" என்றுலோசித்தலும் "ரிஷபத்தின் மீது முன்னர் நாம் செல்வோம்; அடிச்சுவடு பார்த்து நீ பின்பற்றி வா" என்று மீண்டுமோர் ஒலி யுண்டாயிற்று. சுந்தரர் அவ்வாறே பின்பற்றிச் செல்லுங்கால் ரிஷபத்தின் அடிச்சுவடு காணாது போகவே, அவரும் அவரைச் சார்ந்த அன்பர்களும் தியக்க முற்றனர். நந்தியின் அடிச்சுவட்டை நன்கு பார்த்து வருமாறு மீண்டுமோர் அசரீரி யுதித்தது. அவ்வாறே அவர்கள் தொடர்ந்து சென்றபோது, ஓரிடத்தில் எங்கு நோக்கினும் லிங்கமயமாகத் தோன்றவே, மேலே அடிவைக்க வியலாது தயங்க, ஒரு சார்பில் ஒடுங்கிய வழியொன் றுண்டானது. அவர்கள் அவ்வழியே சென்று திருக்கானப்பேர்க் கோயிலின் விமானத்தையுங் கோபுரங்களையுங் கண்டனர். சுந்தரர் அடியார் கூட்டத்துடன் திருக்குளத்தில் நீராடிக் கோயிலுட்புக நோக்கினார். உடனே கோயிலே மறைந்துபோனது கண்ட சுந்தரர், "முன்னரே யுன்னை நாடாததன் விளைவோ இது" எனப் பொருள் கொண்ட பாடலைப்பாடவும், முதலில் ஓர் ஜோதியும், பிறகு கோபுரங்களும் தோன்றின. சுந்தரர் காளீசனை யணுகி வணங்கிப் புகழ்ந்து மகிழ்ந்து, அடியார் கூட்டஞ்சூழ, இறைவனைப் பாடிக்கொண்டு தலயாத்திரையைத் தொடர்ந்தார்.

யில்லை. அங்கே வாழும் மாந்தர் மட்டுமன்றிப் புழுபூச்சி களும் பசுபக்ஷிகளும் மிருகங்களும் முத்தி யுறுவன. அங்கே யாற்றப்படும் புண்ணிய கர்மங்கள் ஆயிரம் பங்கு அதிகப் பயன்றரும். அங்கே யளிக்கப்பெறும் அன்னம் மேருவைப்போல் வளரும். அங்கே செய்யப்படும் தானங் களின் பயன் கூறுமுணாது. ஆதலின் மாந்தர் எவ்வாற் றானும் முயற்சிசெய்து அங்கே வாசம் பூண்டு தன தானிய வஸ்திர தானங்களைச் செய்யவேண்டும்.

சத்திய வாக்கினனும் அவ்வாசன், மகாதேவனது தயையால், மாந்தர்க்கரிதாம் மனுப்பட்ட முற்றபின், அத் தலமுற்று புவனேச்வர லிங்கத்திற்குத் தெற்கே தன் பெயரால் ஓர் லிங்கத்தை பிரதிஷ்டை செய்தான். மானவநாதலிங்கமென்று அது புவியிற் பிரசித்தியுற்றது. ஸ்ரீமனுநாதேசனை சேவிப்பவன் இம்மையிற் சுகமுற்று முடிவிற் சிவபுர மெய்துவான். அவ்வழகியலிங்கம் இலகு மிடம் மனோஹரேச்வரமெனப் பெயர் சூட்டப் பெற்றது. இங்ஙனம் அந்த லிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்ட பின், வானவர் போற்றத் தனதுலகை மனு அடைந்தான்.

கோடி பாபங்களை யழிக்கவல்ல திரிசூலபுரத்தின் பாவனமான்மியம் வரலாற்றுடன் இவ்வாறு நவிலப் பெற்றது. பிரளயகாலத்தில் ஹரன் தனது திரிசூல முனையில் வைத்துக் காத்ததனால் அந்நகர் திரிசூலபுரமென வழக்குற்றது. இதனைக் கேட்போரும் கேட்பிப்போரும் பாபராசியினின்று விடுபட்டு ஹரமந்திர முறுவர்.”

## அத்தியாயம் (௯)

# திரிசூலதீர்த்த மஹிமை

ரிஷிகள் :—

"எல்லாமறிந்த சூத! தங்கள் வதனாரவிந்தத்தினின்று வெளிப்போந்த திரிசூலபுர வைபவத்தைக் கேட்டோம். சூலதீர்த்தமெனத் தாங்கள் கூறியது திரிபுராரியால் எதற்காக நிர்மிக்கப்பெற்றது? அதில் மூழ்குவதாலுறும் பயன் யாதென்பதை விரிவா யெங்களுக் கியம்ப வேண்டும்."

ஸ்ரீசூதர் :—"முனிவர்களே! சூலதீர்த்தத்தின் பாவன மஹிமையை யுரைக்கிறேன்; அதைக் கேட்பதாற் பாபம் போய்ப் புருஷார்த்தங்கள் கைகூடும். உலகின் ஆதிகாலத்தில், சம்பு லிங்கவடிவுடன் புவனேச்வரனாய்ப் புன்னைவனத்தமர்ந்தான். பற்பல மரஞ்செடிகளும் மலர்க்கொடிகளும் நிறைந்து இனிமைமிக்க அவ்வனத்தில் ஜகந்நாதனும் சந்திரசேகரனைப் பார்த்து, மலைமகளாந்தேவி, "சிவசங்கர, பக்தவத்ஸலனும் நாத! சோமசூர்யாக்னிலோசன! உலகைக் காப்பதிற் கருத்து மிக்கோய்! இவ்வழகிய புண்ய க்ஷேத்திரத்தில் எப்பொழுதும் தாங்களிருக்கிறீர்கள். தங்களுக்குப் பணிவிடைபுரிந்துகொண்டு நானும் இங்கேயே வதிகிறேன். நான் நீராடுவதற்கும், தங்களுக்கு அபிஷேகம் செய்வதற்கும் நின்மல தீர்த்தமொன்றை உண்டாக்குங்கள்" என்று வேண்டினள்.

பரந்த விழியினளாந் தேவியால் இங்ஙனம் பிரார்த்திக்கப்பெற்ற பரமேசன் அவ்வாறே தனது கூரிய சூலத்தை யெடுத்து, சிவலிங்கத்தின் முன்னே பூமியைப் பிளந்தான். அவ்விடத்திருந்து பாதாள கங்கை பிரகாசத்துடன் பொங்

கியது. அத்தடாகத்தைக் கண் டதிசயத்துடன் நின்ற தேவியை நோக்கி மகேசன், "அன்பு மிக்கோய்! தூய நீர்ப்பெருக்குடைய இப்புண்ய தீர்த்தம் உனக்காக உண்டாக்கப்பெற்றது. ஒப்பற்ற இப்பொய்கை சூலதீர்த்த மென்றும், சிவகங்கையென்றும் வழங்குறும். இதனிற்படிவோர் பாபமொழிந்து என் வீட்டை யடைவர். எப்பிறப்பில் எந்நிலையிலாயினும், தெரிந்தோ தெரியாதோ, திரிகரணங்களாற் புரிந்த பாபங்களனைத்தும் இதனில் முழுகுவதால் நீங்கிப்போம். கங்கை, கோதாவரி, சிந்து, காவேரி, பெண்ணை, தாமிரபர்ணி, வைகை, ஸரஸ்வதி முதலிய சிறந்த நதிகள்யாவும் இதன்கண்ணெப்போதும் எனதாணையால் உறைவன. இங்கே ஸ்நானம்செய் தியற்றப்படும் பித்ரு சிராத்தம், கயா சிராத்தத்திற்கு நிகராம். வேறெந்தப் புண்ய கர்மமாயினும், இங்கே செய்யப்படின், அதன் பலன் அனந்தம். வைகாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, மாசி மாதங்களில் இங்கே நீராடுவோர் எனக்கு மிக நெருங்கியோராவர். சூரிய சந்திர கிரகணங்களிலும் சோமவார பௌர்ணமியிலும், பொதுவாகப் பூர்ணிமையிலும், அமாவாசையிலும், துவாதசியிலும், சங்கிராந்தியின் போதும் இதனில் முழுகி, முடிந்த தானங்களைச் செய்வதாற் பாபநீக்க முண்டாம். பலவாறுரைப்பதேன்? இத்தகைய தீர்த்தம் எங்குமில தாதலின் பாபபயமுற்றோர் இதனில் மூழ்கி, முடிந்ததானங்களைச் செய்யவேண்டும்" என்றருளித் தேவியுடன் அத்தடாகத்தில் நீர் விளையாடலாடி, நந்தி முதலாங் கணங்களாற் பூஜிக்கப்பெற்றுப் புவனேச்வர லிங்கத்திலே கௌரியுடன் மறைந்தான். வேதாளத் தலைவனாற் பற்றப்பட்ட மாலினி இங்கே மூழ்கித்தான் விடுதலையுற்றாள். இதற்கு நிகர் தீர்த்தம் எங்கே யுளது?"

ரிஷிகள்: "மாலினி என்பவள் யார்? அவள் வேதாளத்தாற் பிடிக்கப்பட்டு, விடுதலையுற்ற வரலாறென்ன?"

முனிவர்களின் இவ்வினாவைக் கேட்ட சூதர் பாப மனைத்தையும் நீக்கும் அப்புண்ய கதையை உரைக்கலானார்.

ஸ்ரீ சூதர்:—"முன்னொருகால் ஹேமரதனென்னும் சேரமன்னன் ஒருவன் தர்மவானாகவும், சத்யபாஷியாகவும், ஜிதேந்திரியனாகவும், பராக்கிரமசாலியாகவும் கீர்த்தியுடன் விளங்கினான். அவனுக்கு சர்வாவயவசுந்தரியாம் குமாரியொருத்தி கலைப்பயிற்சி யனைத்துமுற்றவளா யிருந்தாள். அவ்வழகிய ராஜகுமாரி தனது தோழிகளுடன் ஒரு சமயம் அரண்மனையைச் சார்ந்த எழில் மிக்கதோர் உத்யான வனத்திற்குப் போனாள். பற்பல தருக்களின் நிழல் செறிந்த அந்த நந்தவனத்தில், அவள் மனத்தைக் கவரும் மலர்களைப் பறித்துக்கொண்டு, பல விழுதுகள்விட்டுப் பரந்துயர்ந்து குளிர்ந்ததோர் ஆலமரத்தைக் கண்டாள். அதன்மீது வசித்துவந்த கொடியமனம் படைத்த பாவப் பிறவியாம் வேதாளமொன்று சர்வலக்ஷண சம்பன்னையாம் அவ்வரசிளங் குமாரியைக் கண்டு, ஆற்றொணாக் காதலுற்று, பெண்யானைமீது சிங்கம் பாய்ந்தாற்போல், அவளைப்பற்றிக் கொண்டது. பலமிகப் படைத்த வேதாளத்தாற் பிடிபட்ட அவ்வழகி வெட்டுற்ற மலர்க்கொடியெனத் தரையில் வீழ்ந்தாள். அதைக்கண்ட தோழிகள் அவளை அரண்மனைக் கிட்டுச்சென்று, அரசனிடம் நடந்தவற்றைத்தெரிவித்தனர்.

அரசன், துயருற்று, மாந்திரிகர்களை வருவித்துப் பல்வகை யுபாயங்களாற் பரிகாரஞ்செய்து பார்த்தும், வலிமிகு வேதாளம் மாலினியை விட்டபாடில்லை. வேதாளத் தலைவனது பீடையை விலக்க முடியாது, துக்கத்துடன், மன்னன் நாட்களைக் கழித்தான். காமாதுரனும் வேதாளபதி

யின் சேர்க்கையால் அரசகுமாரி இளைத்து, முகம் வெளுத்து, மனம் நொந்து, வயது முதிர்ந்தவள் போலானாள். இவ்வாறிருக்குங்காற், பேரொளியுந் தவமும் வாய்ந்த கோபிலர் என்னும் மஹாமுனிவர் வேந்தனைக் காண வந்தார். ஹேமரதன் அவரை வணங்கி முறைப்படி யுபசரித்துத் திவ்யாசனத் தமர்த்தி, அவர் களைப்பாறியதும், தன் புதல்வியை முனிவரருகேயிட்டுச் சென்று, துயரம் நெஞ்சை யடைக்கக் கைக்கூப்பியவாறு, "சகல சாஸ்திரங்களையுந் தர்மங்களையு முணர்ந்த விரத சீலராம் முனிவரே! வலிய துராத்மாவாம் ஒரு வேதாளத்தாற் பற்றலுற்று வாடித் துடிக்கும் எனதிம் மகள் உங்களை யிப்போது சரணடைகின்றாள். தயை நிறைந்த முனி சிரேஷ்டரே! வேதாள பீடையினின்று இவளை விடுவித்துக் கைதூக்கிவிடுங்கள்; உங்களுக்குப் புண்ணியம் மிகவுண்டு" என முறையிட்டான்.

சேரனது இவ்வார்த்தையைக் கேட்ட முனீந்திரர், தீர்க்கமாய் ஆலோசித்து, முடிவிற் சந்தோஷத்துடன், அவனை நோக்கி, "அரச சிங்கமே! உன் புத்திரியின் துன்ப நிவாரணத்திற்குரிய உபாயத்தைச் சொல்கிறேன்; கேள். பாண்டிய நாட்டிற் புன்னைவனமெனப் பரமபாவன க்ஷேத்திரமொன்றுளது. அங்கேயுள்ள சூலதீர்த்த மென்னும் சிறந்த தடாகத்தில் மூழ்கினால், உனது கன்னிகை வேதாள துக்கத்தினின்று அக்கணமே விடுபடுவாள். பூத வேதாளப் பிரேத பிசாச ராக்ஷச பீடையுற்றோர் யாவராயினும், அப்பொய்கையிற் படிவதால் விடுதலை பெறுவார். ஆதலின் அரசே! உடனே யுன்மகளைப் புவனேச்வர லிங்கம் விளங்கும் அப்புன்னைவனத்திற் கிட்டுச்சென்று, அவளைக் கொண்டு அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வி. அங்கே

யவள் வேதாளத்திடமிருந்து விடுதலை யுறுவாள்" என்று கூறித் தமதாசிரமத்தை நாடிச் சென்றார்.

முனிவரின் மொழியைக் கேட்டு, அரசன் மகிழ்ச்சி யுற்றுத் தனது தனயையுடன் பாபமெல்லாம் போக்கும் புன்னைவனத் தலஞ் சென்று, பரம பக்தியுடன் புவனேச்வரனை வணங்கிக் குமரியை சூல மஹாதீர்த்தத்தில் ஸ்நானம் செய்வித்தான். அவள் அப் பாவன தீர்த்தத்தில் நீராடியவக்கணமே, வேதாளம் அவளைவிட்டு நீங்கித் தனது கொடிய வேதாளவுடலையுங் களைந்து அத்தீர்த்த மகிமையாலே திவ்யதனுவுற்றுத் தேவவிமானத்தில் வான்வழியே யுயர்ந்தது. வேதாளபதியிடமிருந்து விடுபட்ட மாலினி ராகுவின் மறைப்பு நீங்கிய பூரணசந்திரனைப் போல எழில் பெற்றொளிர்ந்தாள். அரசனும் அபீஷ்டமனைத்து மருளும் அப்புனித வாரியில் நீராடிப் புவனேசனைப் பூஜித்துத் தனது நகர்க்கு மீண்டுந் திரும்பினான். புராதனமாம் இப் பாவன இதிகாசம் இங்ஙனமுங்களுக் குரைக்கப் பெற்றது. தீமையைப் போக்கும் இவ்வரலாற்றைச் செவியுறுவோர் வேதாளபூதப்பிரேத பிசாசராக்ஷசர்களால் இன்னலுறார்."

---

## அத்தியாயம் (எ)

## பாபஹரி மஹிமை

ரிஷிகள் :—

"சூத! சூலதீர்த்த மகிமையைக் கேட்டோம். இனி, கௌண்டின்ய நதியின் மகிமையையும், அதில் ஸ்நானம் செய்வதன் பயனையும், அது புவியில் எவ்வாறு தோன்றிய தென்பதையும் எங்களுக் குரையுங்கள்."

முனிவர்களா இவ்வாறு வினவப்பெற்ற சூதர் கௌண்டின்ய நதியின் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஸ்ரீ சூதர்: "முன்னொருகால், கௌண்டின்யரென்னும் மகா தபஸ்வி, எல்லாமறிந்தவராய், நல்லோர்க்கினியராய், உளமும் பொறிகளு மடங்கியவராய்த் தயை மிக்கவராய், சிவபக்த சிகாமணியாய், விபூதி ருத்ராக்ஷங்களணிந்தவராய், எல்லா நற்குணங்களுமுற்றவராய் விளங்கினர். அவர், ஒரு சமயம், புன்னைவனத்திற்குப் போய், அதன் ஆக்னேய மூலையில் ஆச்ரம மமைத்துக்கொண்டு, பற்பல நியமங்களுடன் தினந்தோறும் பஞ்ச யஜ்ஞங்களைச் செய்பவராய், நாடிவரும் அதிதிகளை வழிபடுபவராய், இதயத்தே ஆதியந்த மற்ற சச்சிதானந்த மகாதேவனைத் தியானிப்பவராய்ப் பல காலம் தவத்திலிருந்தார். அத்தவத்திற் பிரசன்னனாய சங்கரன், தேவியுடனும் கணங்களுடனும் அவருக்குத் தோன்றி, "கௌண்டின்ய! உனது தவத்தால் மகிழ்ந்தேன். வேண்டுவதைக் கேள். இப்புண்ய க்ஷேத்திரத்திற் புரியுந்தவம் விரைவிற் பயனளிக்கும். எனது பல தலங்களினிடையே, இது மிகச் சிறந்ததும் எனக்குகந்ததுமாம். சாம்பனுமெனது சாந்நித்யம் இங்கே விளங்குவதுபோல் வேறெங்குமில்லை. ஆதலின், இங்கே யியற்றப்பெறும் தவமுந் தானமும் சிவபூஜையும், எந்நற்கருமமும் ஆயிரம் பங்கு அதிகப் பயனுள" என்றருளினன்.

இவ்வா றிறைவனுரையைக் கேட்ட கௌண்டின்யர் பார்வதிநாதனைப் பக்திப்பெருக்குடன் துதித்தார்.

"முராரி, பிரமன், இந்திரன் முதலானவரால் சேவிக்கப்பெறுவோனும், பிறை சூடி யழகிய தலையினனும், கருணையமுது தோய்ந்த இதயத்தவனும், திரிசூலநக ரிறைவனுமாம் கிரிசனை வழிபடுகின்றேன்.

6561a
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

எவனது கிருபையாற் கமலாசனன் அகிலவுயிர்த் தொகையையுந் தானே படைத்தலுற்றனனோ, ஹரி சக்ராயுதத்தை எவனருளாற் பெற்றனோ, அத்திரிசூலநக ரிறையாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

மறைகளைப் பரிகளாகவும், தரணியைத் தேராகவும், பிரமனைத் தேர்ப்பாகனாகவும், மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், திருமாலை அம்பாகவுங் கொண்டு, முப்புரத்தை யழித்த திரிசூலநக ரிறையாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

சோம சூரியாக்னி லோசனனும், அறிஞர்க்கினியனும், அந்தகாசுரனைப் பொடித்த அடலாண்மையனும், கிரிகுமரிக் குகந்த எழிலார் திருமேனியனும், திரிசூலநக ரிறைவனுமாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

கடல்கடைந் தெழுந்த நஞ்சை நீலமணி யெனக் கழுத்தி லடக்கிக்கொண்டு, உலகைப் படைத்துக் காத்துத் துடைத்தருளும் திரிசூலநக ரிறையாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

தேவரும் சித்தரும் பணியும் ஜடாதரனும் யானைத் தோலை மேலே போர்த்தவனும், இந்திரோபேந்திராதி வானவர் தலைவரால் வழிபடப்பெறுவோனும் திரிசூலநகராதிபனுமாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

வெள்ளிமலையின் நடுச்சிகரத் துறைபவனும், நாகேந்திர பூஷணனும், பிறப்பிலா அமலனும், கரிமுகனாலும் வேலவனாலும் என்றும் பணியப்பெற்றோனும், திரிசூலநக ரிறையுமாம் கிரிசனைப் போற்றுகிறேன்.

பிரமத கணநாதனும், மலைமகள் மகிணனும், சரணுற்றோரின் துன்பைத் துடைக்குந் திரிலோசனனும், தக்ஷ

யாகத்தைத் தகர்த்தவனும், பகைவரினத்தைச் சிதைப்பவனும், திரிசூல நகரிறையுமாம் கிரீசனைப் போற்றுகிறேன்."

கௌண்டின்யர் மஹாதேவனை இவ்வாறு துதித்து வணங்கிக் கூப்பிய கையுடன், "தேவாதிபனே! உள்ள முவந்து வரமருள நீ நினைந்தால், மூப்புஞ் சாவுமிலா முத்தியை யெனக்கருள். உன் கிருபையால் உத்தம கதியை யடைவேன்" என்று பிரார்த்தித்தார். பக்தவத்ஸலனும் பகவான் மஹேச்வரன், "மகா முனியே! ஞானத்தை யன்றி மோக்ஷத்தை யருளும் சாதனம் வேறில்லை. ஆதலின் எனக்கு மிகவும் பிரியமான இத்தலத்தே யுறைந்து, என்னை நினைந்து, விமல ஞானத்தை நீ பழகி வா. உடலை விடுங்கால், நீ பந்த விடுதலையும் பெறுவாய். மேலும், அந்தணப் பெரியோய்! உனது தவத்தாலுந் துதியாலும் மிக மகிழ்ந்தேன். இன்னுமோர் வரம் உனக்கு வேண்டியதைக் கேள்" என்று கிருபை பெருகும் உளத்தனாய்க் கம்பீரத்வனியுடன் கூறினன். வேண்டுவதை யருளும் சம்புவால் இங்ஙனம் உத்திரவிடப்பெற்ற கௌண்டின்யர், "அமரர் தலைவ! இன்னுமோர் வரமருள நீ திருவுளமுறின், களங்கங்களைக் களையும் கங்கையை இங்கே நீ வருவித்தருள்; கங்கையில் நீராடி உன்னையே நினைந்தவாறு இங்கேயே நான் உடல் விழுமட்டும் வசிக்க விரும்புகிறேன்" என்று வேண்டினார்.*

---

*புராணத்தில், கௌண்டின்யர் பதினாயிரம் ஆண்டு தவம் புரியக் கருதி யமர்ந்து ஐயாயிர மாண்டுகள் நிறைவான வளவில், மழை முற்றுமற்று, பெரும் பஞ்ச முண்டாகவே, முனிவரது வேண்டுகோட் கிசைந்து பரமசிவன் தனது ஜடாபாரத்திலகுங் கங்கையின் ஓர் துளியையே பாபஹாரி நதியாகச் சுழியலை நோக்கிப் பிரவகிக்கச்செய்தா னென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஹரனும் அவ்வாறே தனது ஜடையிலிலகும் கங்கையை நோக்கி, "புண்யவதியாம் கங்கையே! கௌண்டின்யரின் ஆசிரமத்திற்கு விரைந்தோடி வா" என்றுத்தரவிட்டான். நதிகளிற் சிறந்த கங்கையும் அவ்வாறே நான்முக மலையினின்று வேகமாயோடிவந்து, புண்ணியப் புன

---

மேலும் பாபஹரியின் பிரபாவத்தை விளக்கும் வரலாறொன்றும் விவரிக்கப்பட்டுளது. மாளவதேசத் தரசனும் சோமசீதளனென்பான் உலகாயதக் கொள்கையை மேற்கொண்டவனுய்க் கண்முன் கண்டதே யுறுதியெனப் பற்பல கொடிய பாபங்களைப் புரிந்து வெண்குட்டரோகி யானான். எவ்வகைச் சிகிச்சையிலுங் குணந் தோன்றாது போகவே தனது தீமையின் விளைவே யது வென்றுணர்ந்த அம்மன்னவன், நடந்தே யாத்திரை கிளம்பிப் புண்ய நதிகளில் நீராடி, முடிவிற் கங்கையை யுற்றான். அங்கே நீராடத் தொடங்கிய ஒருவன் புண்ணிய நதிகளின் பெயர்களை வழுத்துங்கால் பாபஹரி யென்னும் பெயரை முடிவிற் சொல்வதைக் கேட்ட அரசன் ஆச்சரியமும் சந்தோஷமு முற்று, "இந்நதியின் பெயர் பொருணிறைந்ததாகவே யிருக்கவேண்டும்; என் பெரும் பாவத்தைப் போக்கவல்லது இந்நதியே" என்னும் திடநம்பிக்கையுடன், அவ்வாறிருக்குந் தலத்தை விசாரித்தறிந்து அவ்விடத்திற்கு நடந்தே போனான். நதியைக் காணுமுன்னரே அவனது மனக்கிலேசம் ஒழிந்தது; ஈதென் விந்தையென் றெண்ணுமுன்னர் உடலின் எரிவடங்கிப் பயமுந் தொலைந்தது: நீரிற்படிந்து வெளியேறியதும், அவனது பாபமும் நோயும் அறவே யகன்று, சட்டை கழன்ற பாம்பெனத் தூயோனுய்த் தூயமேனியனு மானான். அதுமுதல், சோமசீதளன் உலகாயதத்தை யறவே நீத்து, உடலிற் றிருநீறணிந்து திருமேனிநாதனைப் பணிந்து சரண் புகுந்து விடைபெற்று மகிழ்ச்சியுடன் தனதிருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

னுடன் மேற்கே யிருந்து கிழக்கே லிங்கத்தின் அக்னி மூலையி லுள்ள கௌண்டின்யாசிரமத்தை நோக்கிப் பெருகியது. தேவாலயத்திற்குக் கிழக்கே தென்முகமாயோடும் அந்நதியைக் கங்காதரன் கண்ணுற்று, முனிவரிடம், "கௌண்டின்ய! அனைத்துலகின் பாபமனைத்தையுமொழிக்கும் கங்கை, இதோ வந்துவிட்டது, பார். எல்லாவுலகும் போற்றும் இவ்வுயர் நதி உன் பொருட்டிங்கே கொணரப் பட்டமையின், இது கௌண்டின்ய நதி யெனவும், பெருவினை சிறுவினை யனைத்தையு மொழிக்குந் தகைமையாற் பாபஹாரி யென்றும் வழக்குறும். தக்ஷிணவாகினியாம் இதனில் என் சந்நிதியெதிரே நீராடுபவன் பாபங்களி னின்று விடுபடுவான். தீர்த்தங்கள் யாவும் என்னுத்தரவால் இதன் கண்ணே யுறைவன. இங்கே நீராடிப் பித்ருதர்ப்பணம் செய்பவன் பித்ருக்களின் கடனிலிருந்து விடுபடுவன். இவ்வாறு பிரமஹத்தி முதலாம் மகா பாபங்களை யொழிப்பதாம் கௌண்டின்ய நதியில் மூழ்கி, என் சந்நிதியைச் சேவிப்பவன் எனதுயர் வீடுறுவன்" என மொழிந்து தேவர்கள் புகழ மறைந்தருளினன்.

மகாதேவனது சடைத் திரளினின்று பெருகிய அத் தூய நீர்ப்பெருக்கைக் கண்டு அகமகிழ்ந்த முனிவர்பெருமான் அதனில் மூழ்கிப் பிதிரர்க்கும் தேவர்க்கும் தர்ப்பணம் செய்து தேவதேவனருளாலே தான் கிருதகிருத்யனைதாய்க் கருதினர். இவ்வாறு, அவ்வாறு எல்லோர் நலத்திற்காகவும் பக்த பராதீனனும் சம்புவாற் கொணரப் பெற்றது. புவனேச்வரத்திற்கும் காளீச்வரத்திற்கும் இடையே பெருகும் அம்மகாநதி காணத் தீவினை களைவதாம். இதனைப்போற் பாபங்களை யொழிப்பதும், மங்களங்களை யருள்வதும், துயரை நீக்குவதும், புருஷார்த்தங்களை

நல்குவதுமாம் நதி உலகில் இல்லை. இதனிற் படிந்து காளீசனையும் புவனேசனையும் பக்தியுடன் பணிவோன் கிருதார்த்தனாவன்.

இவ்வாறு கூறப்பெற்ற கௌண்டின்ய நதியின் பெருமையைக் கேட்போர் பாபமொழிவர். தீவினை நீக்கும் இம் மான்மியத்தைச் செவியுறுவோர் அந்நதியில் மூழ்கிய பயனை யடைதலுறுதி.''

---

## அத்தியாயம் (அ)

## கண்வதீர்த்த மஹிமை

ரிஷிகள் :—

"சூத மஹாத்மாவே! தங்கள் முகாரவிந்தத்தினின்று வெளிப்போந்த பாபஹாரி வைபவத்தைக் கேட்டோம். கண்வ தீர்த்தத்தின் மகிமையை இனிக் கேட்க விரும்புகிறோம். கண்வதீர்த்த மென்னும் பெயர் அதற் கெவ்வாறுற்றது? அதன் விசேஷமென்ன?''

சௌனகாதி முனிவர்களால் இங்ஙனம் வினவப் பெற்ற சூதர் சந்தோஷத்துடன் அவர்களுக்குக் கூறலுற்றார் :—

ஸ்ரீசூதர் : "முனிவர்களே! கண்வதீர்த்த மான்மியத்தை யுரைக்கிறேன்; கேளுங்கள். முன்னர் வாமதேவரது சீடர் கண்வரென்னும் முனிவர், சாஸ்திர மனைத்தின் பொருளுணர்ந்தவராய், தர்மிஷ்டராய், சத்தியவாதியாய், சாந்தராய், எல்லா நற்குணங்களு முற்றவராய் அகந்தை மமதையற்ற சிவபக்தரா யிருந்தார். அவர் ஓர்கால், தவம் புரியும் விருப்புடன், தனது குருவாம் வாமதேவரை யுற்று,

" மஹாத்மாவாம் வாமதேவரே! காமத்தைக் கடிந்தவாற் போற்றலுறுபவரே! சிவானுக்ரகத்தின் பொருட்டுத் தவம் புரிய விரும்புகிறேன். தங்களருளாற் பூரண முக்தியைப் பெறுவேன். எங்கே தவம் புரிந்தால், தவப்பயன் உடனே யெய்துமோ, அத்தகை யொப்பற்ற தபோவனம் எது வென நவிலவேண்டும்" எனக் கேட்டார்.

கண்வரது வார்த்தையைக் கேட்டு மகாதேவ வடிவின ராம் வாமதேவ முனிவர், "மைந்தனே! பாபங்களை யொழிக்கும் உத்தம க்ஷேத்திரம் புன்னைவன மென்றொன் றுளது. அங்கே, தேவரும் மனிதரும் வழிபடும் புவ னேச்வரமென்னும் லிங்கம் முமுக்ஷுக்களுக்கு முக்தி யளிப்பதாய், இன்னும் வேண்டியவனைத்தையும் நல்குவ தாய்த் தீமையை முற்றிலும் போப்பதாய் விளங்குகிறது. அத்தலமுற்று ஒருமையுடன் தவம்புரி. திரிசூலபுரமென் னும் பெயர்பெற்ற அத்தலத்தின் கிழக்கிலுள்ள புண்ய பூமியில் நல்ல தீர்த்தமொன் றேற்படுத்திக்கொண்டு தவம் புரி" என்றருளினார்.

குருவிடம் இவ்வா றனுமதி பெற்று, அகமகிழ்ச்சி யுடன் கண்வர் அவரது சரணாரவிந்தங்களிற் பணிந்து, புன்னைவனஞ் சென்றார். அங்கே, அவர், புவனேசனைத் தரிசித்துத் திரிசூல தீர்த்தத்தில் மூழ்கி, விதிப்படி சிவனை வழிபட்டு, அங்கிருந்து கிழக்கே இருகோச தூரத்துள்ள புண்ய பூமியிலே தன் பெயரால் ஓர் தீர்த்தத்தை யமைத்து, அதன் கரையில் விதிப்படி ஒரு லிங்கத்தை நிறுவிக் காமாரியைப் பூஜித்துத் தவத்தைத் தொடங்கினார். பிர கிருதிக்கு அப்பாலுள்ள நிர்க்குணனும், ஆதியந்த மற்ற சாச்வத சச்சிதானந்த சொரூபியுமாம் சதாசிவனை இத யத்தே தியானித்துப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து நீண்ட

காலம் மமதையு மவாவு மற்றுக் கண்வர் தவம் புரிந்தார். அதனாற் களிகூர்ந்த புவனேச்வரன் சனகாதி முனிவர் களுடன், தியானபராயணரா யிருந்த கண்வருக்குப் பிர சன்னமாகி, "கண்வ மகாமுனியே! உனது தவத்தால் உவகையுற்றேன். உள்ளத்தே நீ விரும்பும் வரத்தைக் கேள்" என்றருளினான்.

தேவர் பலர் சூழ்ந்து பணிய அம்பிகாபதியா மீசன் தன் முன்னே தோன்றியதைக்கண்டு, கண்வர் சாஷ்டாங்க மாய் அவனை வணங்கித் தலைமீ தஞ்ஜலி கூப்பி, ஆனந்த பாஷ்பம் பெருக, மயிர்க்கூச்செறிய, சந்தோஷ சாகரத்தில் மூழ்கியவராய்ப் பலவாறு துதித்து, "தேவதேவ! ஜகந் நாத! அன்பர்க் கிரங்குவோய்! முனிவர்க்கு முத்தியருளும் நீ எனக்கு அமல மோக்ஷத்தை யருள்" என்று பிரார்த் தித்தார். முனிவரால் இவ்வாறு வேண்டலுற்ற காமாரி யாம் பரமேசன் அவரை நோக்கி, "முனிவரேறே! நல் விரதப் பெரியோய்! அவ்வாறே யுனக் கருள்கிறேன். இவ்வுடலின் இறுதிக் காலத்தில் நீ என்னருகிற் சிடனா யிருந்து தூய ஞானம் பெற்று முத்தியடைவாய். உன்னா லமைக்கப் பெற்ற இப்பொய்கை பாபத்தை யொழிப்ப தாய்க் கண்வதீர்த்த மெனப் புவியிற் பிரசித்தியுறும். இதனிற் படிந்து பக்தியுடன் கண்வேச்வர லிங்கத்தைப் பணியுமவர் பாபமகன்று பரமபதம் பெறுவர். அறிந்தோ அறியாதோ, திரிகரணங்களாற் புரிந்த பாபமனைத்தும் இத னில் முழுகுவதால் விலகிப்போம்" என்றுரைத்தான். மலைமகள் கேள்வன் கண்வருக்கிவ்வாறு வரமருளி, வானவர் குழாம் வழுத்தக் கோயிலுள் மறைந்தான்.

உயர் முனிவர்களே! அற்புத மிக்கதும், விரும்பிய வருள்வதுமாம் கண்வதீர்த்தத்தின் பாவனமான்மியத்தைப்

பேசுவோர் அப்புண்ய தீர்த்தத்திலே நீராடியவ ராவர். அந்தணப் பெரியோர் முன்னிலையில் இவ்வாலாற்றைக் கேட்பிப்பவன் மக்களுஞ் செல்வமுமுற்று இனிது வாழ்வன்.

கண்வரின் உக்கிரமிகு தவத்திற் கிரங்கி அவருக்கு முத்தியளித்தவனும், எத்தனையோ பிறவிகளில் ஆற்றிய யோகத்தா லெய்தப் படுபவனும், சுழியற்பதி நாயகனுமாம் உமாகாந்தனை வணங்குகின்றேன்."

---

## அத்தியாயம் (கூ)

## காலவதீர்த்த மஹிமை

ரிஷிகள் :—

"மேதாவியாம் சூத! கண்வதீர்த்தப் பிரபாவத்தைக் கேட்டோம்; இப்போது, காலவதீர்த்த வரலாற்றை யருளுங்கள்."

ஸ்ரீசூதர் : "முனிவர்களே! விசித்திரமும் அற்புதமுமான காலவதீர்த்தப் பெருமையை யுரைக்கிறேன். ஒருமையுடன் கேளுங்கள்.

முன்னொருகால், கந்தமாதனத்தில் காலவ ரென்னும் முனீந்திரர் மகாதேவப் பிரீதியாய் உயர் தவத்தமர்ந்திருந்தார். அவ்வாறிருந்த அவரை அற்ப மதியினனும், காலனைப்போற் கொடியவனுமாம் ஒரு ராக்ஷசன், பசிமிகுந்து, காதைப்பற்றி யிழுத்தான். அவ்வலிய ராக்ஷசனது பிடியிற் சிக்கிய முனிவர் கருணைக்கடலும் பயங்கர பராக்கிரமசாலியுமாம் பைரவனை நினைந்து கூவினார். சூலமுங் கோடரியுங் கதையுந் தரித்த பலவானும் பகவான் காலபைரவன்

முனிவர் முன்னே தோன்றி அம் மிகக்கொடிய ராக்ஷச னிதயத்தைச் சூலத்தாற் பிளந்து காலவரை விடுவித்தான். பைரவனருளால் இங்ஙனம் விடுதலையுற்ற காலவர் காந்த கிரியையும் காலபைரவனையும் வணங்கி, அங்கிருந்து பாவ னப் புகழ்பெற்ற புன்னைவனமுற்று புவனேசனாலயத்திற்கு வடபால் இரண்டு கோச தூரத்தில் ஆசிரம மமைத்துக் கொண்டு சிடர்சூழாஞ் சூழ வசித்துவந்தார். நீராடுதற் காகப் பெரிய பொய்கை யொன்றை அங்கே யுண்டாக்கி, அதன் கரையிலே தன் பெயரால் ஓர் சிவ லிங்கத்தை நிறுவிக் காலவர் நீண்டகாலம் ஆற்றற்கரிய தவமாற்றினர். அத்தீர்த்தம் காலவ தீர்த்தமெனப் புகழ் பெற்றுப் பாபத் தையுந் துயரையும் நீக்கி, விரும்பியவற்றை அருள வல்ல தாயிற்று. காலவரின் பொய்கையிற் படிந்து, காலவ லிங் கத்தை வழிபடுவோன் கிருதார்த்தனவன். சாபத்தால் இன்னல் மிக்க ராக்ஷசத்தன்மை யுற்ற கந்தர்வ னொருவன் முன்னொரு சமயம் இங்கே மூழ்கி விடுதலை யுற்றான்."

ரிஷிகள்: "அக்கந்தர்வன் எவரது சாபத்தால் ராக்ஷச நிலையுற்றான்? எங்ஙன மிங்கே மூழ்கி விடுபட் டான்? எல்லா வற்றையும் விரிவா யெங்களுக் கருளுங்கள்."

ஸ்ரீசூதர்: "ஒரு காலத்தில், சித்ரபாகுவின் மகன் சித்ரத்வஜன் என்னும் பெயரிய கந்தர்வன் காமனைப் போற் கட்டழகுங் காந்தியும் வாய்ந்தவனாய்க் கவர்ச்சி மிகு சீமா னாய்த் திகழ்ந்தான். ஓர்கால் அக் கந்தர்வக்காளை விமானத் திற் பூமியுற்றுத் தேன்பிலிற்றுங் காவனங்களிற் சுற்றிய வாறு முத்கல மகர்ஷியின் ஆசிரமப் பிரதேச முற்றான். அங்கே, தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலிய மலர்கள் நிறைந்து, புள்ளினஞ் சூழ்ந்து, அலைத்திரளுற்ற தெண் ணீர்ப் பொய்கையையும், அதன் கரைகளிற் பற்பல மரஞ்

செடி கொடிகள் செறிந்த வனத்தையும் அவன் பார்த்துக் கொண்டிருக்கையில் முத்கல முனிவரின் மகள், அங்கங்கே நறுமண மலர்களைக் கொய்துசெல்வதைக் கண்ணுற்றான். படைப்புக் கடவுளின் சிருஷ்டிசாமர்த்தியத்தை விளக்கு பவளாய்க் கண்களுக் கரிய விருந்தாயிலகிய சுப்ரபை யென் னும் அவ்வனப்பார் குமரியைக் கண்டு காதலுற்ற அக் கந்தர்வ குலாதமன் கண்கெட்டுத் தன்னிலை மறந்து அக்கற் பரசியைக் கூந்தலைப்பற்றி யிழுத்தான். பலவானும் கந்தர்வ னுற் பலாத்காரமாய் விமானத்தி லேற்றப்பட்ட அம்முனி குமாரி தந்தையை உரக்கக்கூவி, "இக்கொடிய கந்தர்வன் என்னைக் கெடுப்பதற்காக விமானத்திலேற்றிச்செல்கிறான். இவனிட மிருந்து என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங் கள்" என்றலறினாள்.

சுப்ரபையின் பரிதாபக் குரலைக் கேட்ட முத்கல முனிவர் பெருங் கோபத்துடன் வெளியே வந்து, தன் மகளைக் கந்தர்வன் விமானத்திற் கவர்ந்து வெகுவேகமாய்ச் செல்வதைக் கண்டார். சித்ரத்வஜனது விமானத்தை மகாமுனிவர் தனது மந்திரசக்தியால் நிறுத்திக் கீழே யிழுத்தார். கந்தர்வன், சுப்ரபை, இருவருடனும் விமா னம் அருகே யிறங்கியதும், முனிவர் கோபத்தீயுற்ற முகத் துடன் அவனைப் பார்த்து, "கந்தர்வகுலப் பதரே! ராக்ஷ சனைப் போற் கொடியவனாய் என் புதல்வியை நீ கவர்ந்து சென்றதினால், கொடிய ராக்ஷசவடிவுடன் ஊணும் நீருமின் றிக் குளிர்காற்றி லடிபட்டு, அல்லும்பகலும் அலறிக் கொண்டு பலகாலம் வருந்துவாய். உனக்கு சாப விமோ சனம் புன்னைவனப் புண்யத்தலத்தில் ஒளிமிகும் அருளாள னும் காலவ முனிவரால் ஏற்படும்" என்று சபித்துத் தன் குமாரியை சமாதானப்படுத்தி ஆசிரமத்திற் கழைத்துச் சென்றார்.

முத்கலரின் சாபத்தால் சித்ரத்வஜன் கொடிய கருமை வடிவுற்று, ராக்ஷச சரீரத்துடன் பசிதாகத்தாற் கதறிக் கொண்டு பற்பல நாடுகளையுங் காடுகளையும் புதர்களையுந் தாண்டித்தாண்டி ஓயாதராற்றி யலைந்து, முடிவில் அருளாழி யாம் காலவமுனிவர் வசித்துவந்த புன்னைவன முற்றான். அங்கே, அவன் காலவரின் ஆசிரமத்தையும் அம்மஹாத்மாவால் நிர்மிக்கப்பெற்ற அமல தீர்த்தத்தையுங் கண்டான். பல்வகை மரங்கள்மீது புள்ளினம் பல பாட, தாமரை முதலிய மலர்கள் நிறைந்த தடாகம் அலைவீசி விளையாட, முனிவர் அந்தணர்களுக்கு உண்மையை யுபதேசித்துக்கொண்டிருந்தார். இதனிடையே, நீர்த்துளியேந்திய இளங்காற்று ராக்ஷசனுடல்மீது வீசியதும், நொடியில் அவனது கொடியவியல்மாறி, இதய மலர்ந்தது. சித்ரத்வஜன் தன் முன்வினை நினைவுற்றுக் கூப்பியகையனுய்க் காலவ முனிவரிடம், "தன் வினையாலே தவித்து வருந்திக் கொடுமனங் கொடுவாடிய என்னை இத்துயர்க் கடலினின்றுந் தயையுடன் காத்தருள்க" என்று பிரார்த்தித்தான். பகவான் காலவ முனிவர் அவன் வரலாற்றை ஞானத்தாலறிந்து, "பெரியோய்! உன்னை யானறிவேன். பாபத்தாற் பரிபவமுற்ற நீ சித்ரத்வஜனென்னுங் கந்தர்வன்; முத்கல முனிவரின் சாபத்தால் ராக்ஷசனானாய்; அன்ப! அஞ்சாதே; உன்னைக் கரையேற்றுவிக்கிறேன். புண்யமிக்க இத்தீர்த்தத்தில் நீ மூழ்கு; உனது பாபம் பறந்து போகும்" என்றருளி, நீராட அவனுக்கனுமதி யளித்தார்.

சித்ரத்வஜன் அப்புண்ய தீர்த்தத்திற் படிந்ததும் பாபமொழிந்து, ராக்ஷச வடிவு நீங்கித் தனக்குரிய கந்தர்வ வடிவை மீண்டுமுற்றான். திவ்யதேகம் பெற்றதும், அங்குற்ற தன் உத்தமவிமானத் தமர்ந்து, கந்தர்வ

யுவதிகள் மலர்மழை பொழிய மகிழ்ச்சியுடன் மகாதபஸ்வியாம் காலவரைப் பணிந்து, "பாபமகற்றும் இப்புண்ய தீர்த்தத்திலே தங்கள் அனுக்கிரகத்தால் மூழ்கி, முனீந்திரரின் சாபத்திலிருந்து இப்பொழுதே விடுபட்டுச் சுயவடிவுற்றேன். உங்களை நமஸ்கரிக்கிறேன். இப்புனலில் மூழ்கியதும் எனது ராக்ஷச வியல் மாறியவதனால் இதற்கு நிகராவது புவியிலெங்குமில்லை. இத்தீர்த்தத்தில் முழுகுவதால் ராக்ஷச வேதாள பூதப் பிரேத பிசாச மோகினி பீடைகளனைத்தும் தொலையும். முனிவரேறே! அந்தணப் பெரியோய்! தங்கள் தேஜஸால் யான் பெரிய பயத்தினின்றும் விடுபட்டேன். மீண்டுமுங்களை வணங்கி, எனது நகர்க்குச் செல்கிறேன்" என்று கூறி, காலவ மஹானிடம் விடை பெற்றுப்புவனேச்வரனை வணங்கிக் கந்தர்வன் தனது நகரை நண்ணினன்.

சித்ரத்வஜன், இங்ஙனம், பாவனப் புன்னைவனத்திற் பூமிநாதனருளாற் காலவ தீர்த்தத்திற் படிந்து சாபவிமோசன மெய்தினன். பாப மகற்றும் இப்புனித வரலாற்றைப் பகர்பவன் பல்வகைக் கொடும் பாவங்களினின்றும் விடுபடுவான். 'ரக்ஷா விமோசனம்' எனப்படு மிதனைப் பேசுவோன் ஒரு நாளும் ராக்ஷசபீடையுறான்."

---

## அத்தியாயம் (௯௦)

## கோடிதீர்த்தம் முதலியவற்றின் மஹிமை

ஸ்ரீசூதர்:

"அந்தணர்களே! இப்போது, ஐந்தாவதாகிய கோடிதீர்த்தத்தின் பாவன மகிமையை யுரைக்கிறேன். கீர்த்திமிக்க பாண்டவனும் அர்ஜுனன், தருமாது தூண்டு

தலாலே தீர்த்தயாத்திரை புறப்பட்டுப் புண்ய தீர்த்தங்கள் யாவிலும் விதிப்படி நீராடிவருங்காற் பாண்டிய பூபதியின் மகளாம் சித்திராங்கதையை மணந்து, அவளுடன் சுழியற் பதியுற்றுக் கல்யாணசுந்தரனை முறைப்படி வழிபட்டான். அப்போதவன் ஓர் தீர்த்தத்தை நிர்மிக்கக் கருதித் தனது வில்லாம் காண்டீவத்தை நினைதலும், அது அங்கே வந்துற் றது கண்டு, அதன் முனைகொண்டு பூமீசனுக்கு முன்னுள்ள பூமியைப் பிளந்து ஓர் புண்ய தீர்த்தத்தை யமைத்தான். அர்ஜுனனது வில்லின் கோடியால் வகுக்கப்பட்டமையின் அப்புனல் கோடிதீர்த்தமெனப் பெயர்பெற்றது. அதனில் முழுகுவோர் பாபமெல்லாம் நீங்கி எல்லா மங்களங்களையும் ஐச்வரியங்களையும் பெறுவர்.

இனி, பூமிதீர்த்தத்தின் பெருமையைக் கூறுகிறேன். *முன்னொரு காலத்தில், மலைமகள், கோபத்தாற் புவியைச் சபித்தாள். பார்வதியைச் சந்தோஷப்படுத்துந் தவம்புரிய பூமிதேவி புன்னைவனமுற்றுத் தன் பெயரால் ஓர் தீர்த் தத்தை அமைத்துப் பல்லாண்டுகள் கடுந்தவம் புரிந்தாள். அத்தவத்தால் மகிழ்ந்த மாணிக்யமாலாதேவி, பூமி

* ஹிரண்யாக்ஷன் பூமியைப் பாய்போற் சுருட்டிக் கொண்டு பாதலமுற்றான். தேவர் வேண்டுதலின்படி திரு மால் அவ்வரக்கனைக் கொன்று புவியை விடுவித்தான். அரக் கன்து பரிசமுற்ற மாசகல வழிநாடிப் பூதேவி கயிலை சென் றாள். கயிலைப் பெருமான் சுழியலிலே தன்னை வழிபட்டுக் குறை திருமாறு அவளுக்கருளினன். அவ்வாறே நிலமாது சுழியலையுற்றுத் தன் பெயராலே தீர்த்தமொன்றுண்டாக் கிப் பூமிதேவனை வழிபட்டுத் துதித்தாள். பூமிநாதன் அவ ளுக்குத் தன் காட்சியை யளித்து, அவளைப் பவித்திரையாக்கி யருளினன் என்பது புராண வரலாறு.

தேவியை நோக்கி, "வசுதையே! நினது தவத்தாற் களித்தேன்; என் சினை மொழிந்தது; வேண்டும் வரத்தைக் கேள்" என்றுரைத்தாள்.

உயிரனைத்தையுந் தாங்கும் பூதேவி பார்வதியை வணங்கிக் கைகூப்பி, "பர்வதராஜகுமாரி! பத்மாக்ஷி! காமாரியின் வாமபாகமாய்த் திகழ்பவளே! குமரனையும், கணபதியையும் இடத்தும் வலத்துங் கொண்டவளே! பக்தர் வேண்டுவதை யருள்பவளே! கமலையும் சசியும் ஸரஸ்வதியும் போற்றும் பத கமலத்தினளே! அனைத்துயிரன்னையே! சங்கரப் பிரியையே! அன்பர் பங்கி லிரங்குமுளத்தினளே! பந்த மொழிப்பவளே! எல்லாவுலகினடைக்கலமே! அறியாது நான் செய்த பிழையைப் பொறுத்தருள். ஐச்வரிய மனைத்துமருளும் எழிற்கடைக் கண்ணினளாம் சிவையே! என்னை ஏற்றுக்கொள், மக்களை யெனக்கருள்" என்று பிரார்த்தித்தாள்.

இங்ஙனம், பூதேவியாற் புகழப்பெற்ற உலக நாயகியாம் அம்பிகை பரமானந்தமுற்று முறுவல்பூத்த முகத்துடனவளைத் தழுவி, "உலகைப் பாவனமாக்கும் பூதேவி! அவ்வாறே யருளினேன். எனதுத்தரவால் இனி யுனக்கு சந்ததிப்பெருக்குண்டாம். உன்னால் ஏற்பட்ட இத்தடாகம் பூமிதீர்த்தமெனக் கீர்த்தியுற்றுப் பாபத்தை யகற்றி, சம்பத்தை யருளி, எனதுயர் வீட்டைச் சேர்ப்பிக்கும்" என வரமருளி, அனைத்துலகும் வணங்க, அங்கே மறைந்தாள். வரம்பெற்ற பூதேவியும் சந்தோஷத்துடன் புவனேச்வரனையும் பார்வதியையும் பணிந்து தனதிடமுற்றாள். புவனேச்வரன்சந்நிதியிற் பூமிதேவியினால் அமைக்கப் பெற்றதனால் அத்தீர்த்தம் பூமிதீர்த்தமென மூவுலகும் புகழோங்கியது.

இனி ஞானதீர்த்தத்தின்* மகிமையை இயம்புகிறேன். முனிவர்களே! பூமிநாதனுக்கு மேற்கேயுள்ள பிரசித்தி மிக்க தீர்த்தமே ஞானதீர்த்த மெனப் பெயர்பெறும். அதில் ஸ்நானஞ் செய்பவன் அஞ்ஞானத்திரை நீங்கிப் பூரணஞானப் பெருக்குறுவன். பிறவியூமைகளும், அறிவிலி களும், பித்தர்களும், மூடர்களும், குருடர்களும் அதனில் மூழ்குவதால் அவ்வக்குறை நீங்கப்பெறுவர். அங்கே முழு கித்தான் சாபத்தாற் கிளியுருவுற்ற கந்தர்வனொருவன் சாப விமோசனம் பெற்ருன். வடிவுங் குணமுமுற்ற சித்ரரூப னென்னும் கந்தர்வ குமாரன், ஒரு காலத்தில், நிசாகர மஹா முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று, அங்கே விரத நியமங்களை முடித்து, அதிதி பூஜையையும் நிறைவேற்றிப் பசியுடன் காட்டுப் புல்லரிசிச் சோற்றை உண்ணவிருந்த முனிவரைக் கண்டான். விரும்பியவடிவுறவல்ல அத்தீ யோன் போதாக் காலத்தாற் முண்டலுற்றுக் கிளிவடிவு கொண்டு, விளையாட்டுப் புத்தியினுல், அவமதிப்புடன், முன்னேயிருந்த உணவை இறகுகளாலுங் கால்களாலும் அலகாலும் பலவாறு சிதறியிறைத்தான். உணவு வீணுய்ப் போனதைக் கண்ட முனிவர், இதுவென்னவென் ருலோசித்துக் கந்தர்வனது சேஷ்டையென்றறிந்து, கண்சிவக்க, உதடு துடிக்க, அவனை நோக்கி, "ஏ, கந்தர்வா! உண்ணக் கருதியிருந்த எனதன்னத்தைச் செருக்கினுற் கெடுத்ததன் பலனை யுண்ணப்போகிருய். கருவத்தாற் கண்கெட்டு, எவ் வடிவுடன் என்னுணவைக் கெடுத்தாயோ, அக்கிளிவடிவுட னேயே யிரு" என்று சபித்தார்.

---

*பூமிநாதனுக்கு மேற்கேயுள்ள ஞானதீர்த்தம் கௌதம ரால் உண்டாக்கப்பெற்றதென்று புராணத்திற் காண் கிருேம்.

உடனே சித்ரரூபன் தூக்கமுற்றுக் கருவங்குலைந்து, ஊக்கங்குன்றி, வணக்கத்துடன் முனிவரைப் பணிந்து, கோபநீக்கத்தையும், சாபவிடுதலையையும் வேண்டினான். கந்தர்வனது பிரார்த்தனைக் கிணங்கி, நிசாகரர், "சித்ரரூப! உனக்கு நலனுரைக்கிறேன். வெகு காலத்திற்குப் பின்னர் நீ எனதாணைப்படி புன்னைவனத்தலமுற்று, அங்கே பூமிநாதனுக்கு மேற்கே அஞ்ஞான விருளையும் பாபத்தையு மொழிக்கும் ஓர் உத்தம தீர்த்தத்தைக் காண்பாய்; உடனே நீ ஞானமுற்று, அறிவுடனதனிற் படிந்து விடுதலை பெறுவாய்" என விமோசனமுருளித் தனதிடஞ் சென்றார்.

கந்தர்வன் முனிவரின் சாபத்தாற் கிளிவடிவுடன் புவியெல்லாங் கிலேசத்தோடலைந்து, முடிவிற் புன்னைவனத்தையடைந்தான். அங்கே யவன் தற்செயலாய் ஞானதீர்த்தத்தையுற்றதும், அதன் மகிமையாலே தன் பூர்வ வினையின் ஞாபகம் மூண்டு முனிவர் வாக்கையும் நினைந்து, சித்தவோர்மையுடன் அதனில் மூழ்கினான். அப்பொழுதே அவன் சாபவடிவாங் கிளியுரு நீங்கித் துயரகன்று, திவ்ய வடிவம் பெற்றான். சுவர்ணப்பிரபையுடன் தங்கமும் மணியுமிழைத்த விமானமுமங்குற்றது. சித்ரரூபன் திவ்யாபரணங்களணிந்து, நறுமணமுடலிற் பூசி, தன் காந்தியாற் சுற்றுப்புறங்களை யொளிர்விப்பவனாய், விமானத்தமர்ந்து, கந்தர்வர்கள் துதிக்கத் தனது பெண்மணிகள் சூழ, முகமலர்ச்சியுடன், வானமத்தியினின்று, ஞானதீர்த்தத்தைப் பார்த்தவாறு, "என்னே இத்தீர்த்தத்தின் மகிமை! எவரே இதை எடுத்துரைக்கவல்லார்? இதனைக் கண்டவுடன் ஞானத்தொடர்புற்றேன்; இதனில் மூழ்கியதும் நிசாகர முனிவரின் நீக்கொணாச் சாப வினைவாம் கிளிவடிவு நீங்கினேன். இதற்கிணையாந் தீர்த்தம் புவியெங்குமில்லை.

இதனில் நீராடுவோன் பாபம் நீங்கி ஞானம் பெறுவான்" என்று கூறி, அத்தீர்த்தத்தை வணங்கிப் புவனேசனைப் பணிந்து துதித்து முறைப்படி வழிபட்டுத் தனது நகர் போய்ச் சேர்ந்தான்.

தீர்த்தங்களின் அரசாம் ஞானதீர்த்தத்தின் வைபவ முரைக்கப் பெற்றது. முனிவர்களே! இனி பிரமதீர்த்தத் தின் மகிமையைக் கேளுங்கள்."

---

## அத்தியாயம் (கக)

## பிரமதீர்த்த மான்மியம்

ஸ்ரீசூதர் :—

"கேட்ட மாத்திரத்திற் கொடிய பாபங்களைப் போக்குவதும், விந்தைமிகு பயனை யளிப்பதுமாம் பிரம தீர்த்த மான்மியத்தைப் புகல்கிறேன். திரிசூலநக ரிறைவ னும் பரமேசன் பிரளயக் கடற் பெருக்கினின்றுங் காப் பதற்காக அந்நகரை லீலையா லுயரத்தூக்கிப் பாண்டிய மன்னனும் இந்திரத்யும்னனை ரக்ஷித்தபோது தேவதேவ னது அவ்வற்புதச் செயலைக் காண்பதற்கு சத்யவுலகி னின்று பிரமன் அமர கணங்களுடன் அவ்விட முற்றான்; ஜனங்களுடனும் மன்னவனுடனும் நகரம் வானத்தே நிற்கும் பேராச்சரியத்தைக் கண்டு, பார்வதிபதியாம் திரி சூலியை வியந்து வணங்கி, அவ்விடத்தே தன் பெயரால் ஓர் தீர்த்தத்தை யுண்டாக்கி, அதன் நீரால் சிவலிங்கத்திற் கபிஷேகஞ் செய்து பூஜித்துப் பலவாறு துதித்துத் தன் னுலகிற்கு மீண்டுந் திரும்பினான். பிரமனால் நிர்மிக்கப் பெற்றமையின் அத்தீர்த்தம் பிரமதீர்த்த மெனப் பிரசித்தி யுற்றது. பாபக் காட்டைப் பொசுக்கும் பெருந் தீயாம்

அத் தீர்த்தம் லிங்கத்திற்கு வடபாலுளது. அங்கே ஸ்நானஞ்செய்து உமாநாதனைத் தரிசிப்பவன் கிருதகிருத்யனாவன். புண்யகாலங்களனைத்திலும் பிரமதீர்த்த ஸ்நாநம் அளவறு பயனை யளிப்பதாம்.

இனி திரிலோசனதீர்த்தத்தின் வரலாற்றைக் கூறுகிறேன். காளீச்வரக்ஷேத்திரத்தினின்று காளியுடன் திரிலோசனன் மேற்கூறிய அற்புதத்தைக் காண்பதற்குற்று, ஈசனது அவ்வசாதாரண விசித்திர சரிதத்தைப் பார்த்து, ஈசான திக்கில் ஆபத்தனைத்தையு மகற்றுமோர் தீர்த்தத்தை யுண்டாக்கி அதன் வாரியால் லிங்கத்திற் கபிஷேகஞ் செய்து, அத்தீர்த்தத்திற்கு வரத்தையும் அளித்தான்.* சாக்ஷாத் திரிலோசனனாலே நிர்மிக்கப்பெற்றவதனால் அது திரிலோசனதீர்த்த மெனஉலகிற் கீர்த்தி பெற்றது. திரிலோசனதீர்த்த நீரை சேவிப்பவன் பிறவி நீங்கிச் சாவாநிலை பெறுவன். அத்தீர்த்தத் துளிகளை மேலே தெளித்துக்கொள்பவன் எல்லாப்பாபத்தினின்றும் விடுபடுவான். அதைப் பருகுவோன் மீண்டும் முலைபீருகா முத்திநிலை பெறுவான்; அதைக் கையாற் பரிசிப்பவன் பாப மொழிந்து சிவபுர மெய்துவான். மாசகற்றும் அதன் கரையிலே தானங்கள் செய்பவன் போகங்கள் யாவும் பெற்றுக் கயிலையுஞ் சேர்வான். அங்கே பிதிரர்வழிபாடியற்றுவோனது முன்னோர் கற்பாந்த மட்டும் இன்புறுவர். பூஜை ஜபம் முதலிய எவையு மங்கே கோடிப் பயனளிப்பனவாம். திரிலோசனதீர்த்த மான்மியத்தைக் கேட்கப் பாபந் தேய்ந்து புண்ணிய மோங்கும்.

---

* ஈசன் பிரளயத்தைச் சுழித்ததன் ஞாபகமாக சந்திரசேனபாண்டியனால் அத்தீர்த்தம் உண்டாக்கப்பெற்றதென்று புராண வரலாறு.

முனிவர்களே! இவ்வாறு அம்மகா க்ஷேத்திரத்துள்ள ஒன்பதுபாவன தீர்த்தங்களின் பெருமையுங் கூறப்பெற்றது. இப்புண்யதீர்த்தங்களில் நீராடிப் பூமிநாதனையும் புஷ்பமாலினி தேவியையும் வழிபட்டுக் காளீச்வரனையும் வணங்குவோன் ஜீவன்முக்த னாவன். திரிசூலநகர்க்கொப்பாம் புண்ணிய நகரும், பூமிநாதனைப் போன்ற ஓரிறைவனும், சிவதீர்த்தத்திற் கிணையாம் ஓர் தீர்த்தமும் புவிமிசை யெங்குங் கண்டதுங் கேட்டது மில்லை. இவ்வா றுரைக்கப்பெற்ற பாவனமாம் இத்தீர்த்தமான்மியத்தைக் கேட்போர் அவற்றில் மூழ்கிய பயனுறுவர். அந்தணர்க்கும் அறவோர்க்கும் பிறர்க்கும் இதைச் சிரவணஞ் செய்விப்பவன் தீர்த்தபயனைப் பெற்றவனாவன்."

---

## அத்தியாயம் (கஉ)

## சூலதீர்த்தப் பிரபாவம் (1)

ரிஷிகள் :—

"சாஸ்திர புராணங்கள் யாவுந் தேர்ந்த வாசாலரே! அருட் கடலாம் சூத பகவானே! அற்புத மிக்கதும் பரம பாவனமுமான சுழியல் மான்மியத்தையும், லிங்கரூபியாம் திருமேனிநாதனது பெருமையையும், சூலதீர்த்தம் முதலியவற்றின் வைபவத்தையும் கேட்டோம். சூல தீர்த்தத்திற்கு நிகர் மூவுலகிலு மில்லையென எல்லாமறிந்த மஹாதேஜஸ்வியாம் தாங்கள் கூறினீர்கள். பாபமெல்லாம் போக்கும் கங்கை முதலாந் தீர்த்தங்களிருக்க இத்தீர்த்தம் அனைத்தினு மேலாவ தெவ்வாறெனக் கேட்க ஆவல் மிகவுற்றோம். சூதகுமாரரே! இவ்விவாதத்தை எங்களுக் கருளி எங்களையத்தைக் களையவேண்டும்."

ஸ்ரீ சூதர் :—"பெரியோர்களே! சாஸ்திரசாரத்தை யுணர்ந்த நீங்கள் உலகைக் காப்பதற்காகவே இப்பாவனப் பிரச்னத்தை நிகழ்த்தினீர்கள். மிகவும் நன்று. கங்கைமுதலாந் தீர்த்தங்களினும் சூலதீர்த்தம் சிறப்பு வாய்ந்ததென்பதுறுதி. வலது புயத்தை யுயரத்தூக்கி, இதன் காரணத்தை யுரைக்கிறேன்; ஏகாக்கிரமாய்க் கேளுங்கள். கங்கையே இங்கே மூழ்கித் திருமேனிநாதனை வழிபட்டுப் பாபமனைத்தினின்றும் விடுபட்டு, என்றும் மகிழ்வுற்றிருக்கிறாள்."

ரிஷிகள் : "தீர்த்தங்களுட் சிறந்ததென மூவுலகினும் பிரசித்தி பெற்ற பாவன கங்கைக்குப் பாபத்தொடர்பு எவ்வாறுண்டாயிற்று? எதற்காக, எப்போது, சுரநதியாம் அவள் இங்கே நீராடினளென்பதைச் சொல்லுங்கள்: அதைக் கேட்க மிகவும் அவாவுகிறோம்."

ஸ்ரீ சூதர் : "முனிவர்களே! பாபங்களை யறுத்து எல்லா நலனையும் நல்கும் தொல்வரலாறொன்றை உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள். திலீப மன்னனின் குமாரன், பகீரதனெனப் பெயர் வாய்ந்தவன், தர்ம மறிந்தவன், ஸத்யபாஷி, மக்களைக் காப்பதிற் கருத்தூன்றியவன், தன் பித்ருக்களை வானுலகு சேர்க்கும் விருப்பினால் ஆகாச கங்கையைப் பாதாளத்திற் கிட்டுச் சென்றான். உலகையெல்லாம் பாவனமாக்கும் அக்கங்கை ஒருகால் எழின்மிகு திவ்யவனிதைவடிவுற்றுக் கண்ணீர் மல்கத் துயரத்துடன் ஸத்யவுலகஞ் சென்று, அங்கே அனைத்துலகின் பாட்டனாகிய பிரமனைக் கண்டு, அவனது பதமிணையை வணங்கித் துதித்து, "கமலத் துதித்த தேவே! படைப்பின் தலைவனும் பக்த வத்ஸல! உலகிலுள்ள எத்தனையோ பாபிகளும், மஹாபாபிகளும் தங்கள் பாப நீக்கத்தின் பொருட்டுத் தினந்தோறும் என்னைத் தொட்டுப் பாபந்

களை என்னிடம் விட்டுப் புனிதராய்ச் செல்கின்றனர். இதற்குப் பரிகார மென்னவென் றாலோசித்து, விரைவி லெனக் கருளுங்கள்" எனத் தனது துயரை அழுது தெரி வித்துக் கொண்டாள். கங்கையின் சொல்லைக் கேட்டு, இரக்க முற்ற பிரமன், "கங்காதேவி! மங்களமயி! வருந் தாதே. எல்லோர் துயரையும் போக்கும் மூவுலகின் குரு வாம் இறைவன் கைலாசத்தில் வீற்றிருக்கிறான். அங்கே போய், உலகிற்கு நலனைப் புரியும் சங்கரனிடம் இதனைத் தெரிவித்துக் கணத்தில் உனது துன்பை நீக்குகிறேன்" என்றவளைத் தேற்றி வைகுண்டஞ் சென்று, விஷ்ணுவையும் அழைத்துக் கொண்டு, சங்கர னுறைவிடமாம் கயிலாய முற்றான்."

---

## அத்தியாயம் (கஉ)

## சூலதீர்த்தப் பிரபாவம் (2)

ஸ்ரீ சூதர் :—

"கங்கையை முன்னிட்டுக் கமலாசனன் விஷ்ணுவுடன் பகவான் உமாபதியைப் பணிந்து "அகில வுலகிற்கும் சாக்ஷியும், தேவாசுரர் வணங்கும் பதத்தினனும், பிறை சூடியவனும், கௌரீசனும், வேதாந்தத்தால் அறியப்படும் ஸச்சிதானந்த வடிவனும், அடைந்தோர் விரும்புவதை யருளும் உயிர்களின் பதியுமாகிய பரசிவனுக்கு, ஹர னுக்கு, சர்வனுக்கு நமஸ்காரம். மஹாதேவ! சங்கர! எல்லாவுலகிற்கும் நன்மையை விரும்பும் இக்கங்காதேவி யின் கிலேசத்தை நீக்கிக் காத்தருள்" என வேண்டித் தண்டம் போல் விழுந்து வணங்கினான்.

ஜகன்மங்களகரனும் பகவான் சங்கரன் அயனை நோக்கி, "பிரமனே! கங்கை யிங்குற்றதன் காரணத்தை

உடனே பகர் ; வேண்டுவ தனைத்தையும் ஐயமின்றி யருள்கிறேன்" என்றறைந்தான்.

பிரமன் : "அனைத்துலகிற்கும் உபகாரமே செய்யும் மறுவறு மேனியளாம் இக்கங்கை தன்பால் ஏற்பிக்கப்பட்ட பாபமனைத்தும் நீங்குதற்குரிய உபாயத்தை நாடுகின்றாள். உடனே இவள் பவித்திரையாகி என்றென்றும் மாந்தரின் பாபத்தை நீக்கிக்கொண்டிருக்குமாறு எல்லாமறிந்த பரமாத்மாவாம் தாங்கள் அருளவேண்டும்."

ஈச்வரன் : "பிரமனே, ஆத்ம ஞானமின்றி மயங்கும் மாந்தர் நாடோறும் பிரமஹத்தி முதலாம் பாபங்களைச் செய்துகொண்டே யிருத்தலால் அப்பாபவிமோசனத்திற்காக நானே கங்கையைப் படைத்தேன். இவளைக் கண்டாலுந் தொட்டாலும் நினைந்தாலும், எனதாணையாற் பாபங்கள் விலகும். இவ்வாறவள்பாற் சாரும் பாபங்கள் தொலைதற்குத் தக்க பரிகாரம் அவசியம் செய்யவேண்டுவதே." (கங்கையை நோக்கி) "கங்கையே ! நின் பாபங்கள் நெருப்பிற் பஞ்செனப் பொசுங்கிப்போதற்கு ஒன்றேயாம் உபாயத்தை யுரைக்கிறேன். குவிந்த மனத்துடன் கேட்டு, உலகத்தின் பேருபகாரத்திற்காக, அதை நிறைவேற்று."

கங்கை :—"சரணுற்றோர்பாற் கருணையுறும் ஸ்வாமி ! என் பாபத்தை உடனே நீக்கவல்ல உபாயத்தை யருளுங்கள்."

ஈச்வரன்:—"மங்களமயி! மதுரையம்பதிக்குத் தெற்கே மூன்று யோஜனை தூரத்திற் சுழியலென்னும் உளத்தைக் கவரும் தலமொன்றுளது. அங்கே என் சாந்நித்யம் எக்காலு மிலகும். அவ்வாலயத்தின் முற்புறத்தில் என் சூலத்தால் நிர்மிக்கப்பெற்றதும், ஒப்பறுசிறப்புற்றதுமாம்

சூலதீர்த்த மிருக்கிறது. பாதாளகங்கையின் புனல் நிறைந்த அத்தடாகம் பாபமனைத்தையும் போக்குவதாம். எழிலிடையினளே! ஆண்டுதோறும் மாசி நிறைமதி யன்று நடுப்பகலில் அங்கே நீ தோய்ந்து திருமேனிநாத லிங்கத்தை வழிபடுவையேல், எல்லாப் பாபமும் நீங்கி ஐயமின்றிப் பவித்திரையாவை" என்றருளிக் கயிலாயபதி யாம் இறைவன் மறைந்தான்.

சிறப்பார் மறையவரே! அதுமுதல் ஆண்டுதோறும் மாசிமாதப் பௌர்ணமியிற் கங்கை சுழியலை யுற்று (சூல தீர்த்தத்தில்) மூழ்கித் திருமேனி லிங்கத்தை அபிஷேகம் செய்து வருகிறாள். அப்பொழுது சுக்கிலபக்ஷத்திற் சூல தீர்த்தத்தின் புனல் நாடோறும் பௌர்ணமிவரை பொங் கிப் பெருகி, அதன் பிறகு தினந்தோறும் இறங்கிப் பழைய விடத்திற்கு வரும். இக்காட்சி வருஷந்தோறுங் காணப் படும்.* அப்பௌர்ணமியன்று சூலதீர்த்தத்திற் படிபவன் கங்கையிற் றோய்ந்த பயனுறுவன்; அவனது பிதிரர் திருப்தி யுறுவர்; தேவதைகளும் அவனிடம் சந்தோஷமுறுவதனால் எல்லா நலனும் அவனுக்குண்டாம். அதனாலேயே எல்லாத் தீர்த்தங்களினும் இது மேம்பட்டது. இதற்கு நிகர் யாங் கணுமிலதாதலின், முத்தியை நாடுவோர் எவ்வாற்றானும் இதனில் முழுகுதல் வேண்டும். இத்தீர்த்த வைபவத்தைக் கேட்போரும் படிப்போரும் பாபமெல்லாம் நீங்கிப் புத்தியையும் முத்தியையும் பெறுவர்."

---

* சூல தீர்த்தம் இவ்வாறு பொங்குதல் சிவபெருமான் பிரளயத்தைப் பிலத்துவாரத்திற் சுழித்து வற்றுவித்ததை நினைவுறுத்துவதற்கென்று புராணத்தின் பிரளயஞ் சுழித்த சருக்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

## அத்தியாயம் (கச)

## பன்னககிரியின் வரலாறு

ரிஷிகள் :

"சூத! புவனேச்வரமெனப் பெயர்பெறும் புன்னை வனத்தின் மேற்கே பன்னககிரி யிருப்பதாகக் கூறினீர்கள்; அதற்கப் பெயருற்ற வரலாற்றை எங்களுக்கருளுங்கள்."

இவ்வாறு முனிவர்களாற் கேட்கப்பெற்ற சூதகுமாரர் தியானத்தாற் பவித்திரராய அவர்களுக்கு அப்புண்ய கதையை யுரைத்தார்.

ஸ்ரீசூதர் : "முனிவர்களே! கேட்டமாத்திரத்திற் பெரிய பாபங்களுமொழியும் பன்னககிரியின் பாவன மான்மியத்தைக் கூறுகிறேன். மதுரையிலுறையும் கருணாநிதியாம் சுந்தரேசன் முன்னொருகால் தன் பக்தனுக்கருளியதைக் கேளுங்கள். பாண்டியனும் சோழனுமாம் புகழ் மிகும் இருமன்னர்கள், பரஸ்பரம் பகைமையும் பொறாமையுமுற்றுக் குழம்பியிருந்தனர். பாண்டியனாற் றுன்புற்றுக் கோபமேலிட்டு, அவனை எதிர்த்துச் சண்டையிடவும் இயலாதுபோன சோழன் எப்படியாவது அவனை வேறுக்க நிச்சயித்துப் பிராமணுதமர் சிலரை வருவித்து, நிர்வாணக் கொள்கையினராம் அத்தீயோரைக்கொண்டு ஆபிசார வேள்வி செய்வித்தான். நிர்வாணத்துடன் செய்யப்பட்ட அவ்வேள்வியின் அனலிலிருந்து, மந்திரசக்தியாலே, கொடிய விஷமும் நீண்ட பெருவடிவும் பலமுமுற்ற பாம்பொன்று கிளம்பியது. கோபாவேசத்துடன், இரண்டு யோஜனை நீளமுற்றதாய், வேகமும் விஷமும் மிக்கதாய்ப் புறப்பட்ட அப்பெரு நாகத்தை நக்கினர்களுஞ் சோழ மன்னனும், "சர்ப்பமே! தெற்கே பாண்டிய நாட்டிற்கு

வேகமாய்ச் சென்று அம்மன்னனையும் அவன் ராஜ்யத்தை யும் நாசமாக்கு" என்றேவினர். விஷச்சுடருடனும் பயங் கரச் சிற்றொலியுடனும் அவ்வரவம் பாண்டியர்களனைவரை யுங் கொன்றது; தீண்டியும், விஷமூச் செறிந்தும், வாலா லடித்தும் பலரை மாய்த்தது. சிவபக்தனும் மன்னன் மக் களை யெல்லாம் மாய்த்துவரும் மலைபோன்ற அப்பாம்பு தகையொணு வன்மையுற்றிருப்பது கண்டு, இறைவனரு ளாலேயே அதை வெல்லவேண்டுமென நிச்சயித்து, இத யத்தே யீசனை நினைந்து, சுந்தரேசனது ஆலயமுற்று, அஞ் ஜலி கூப்பி வணங்கித் துயருடன், "மஹாதேவ! ஜகந்நாத! பக்தவத்ஸல! சங்கர! பார்வதி நாயக! இப்பாம்பின் பயத் தினின் றெங்களைக் காத்தருள். இந்நகர் உன்னது; இதி லுறைவோர் நின்னன்பர், பெருவடிவும் வேகமுமுற்ற இவ் வரவு விஷத்தீயால் எல்லோரையும் மாய்க்கிறது; எங்களை யுடனே காப்பாற்று. நீயே இந்நகரின் அரசனும் அன்னை யுந் தந்தையுங் குருவும் நண்பனும் பந்துவுந் தெய்வமு மாவை. ஆதலின், சம்புவே! இந்நகரைக் கிருபையாற் காத்தருள். கடலினுதித்த கடு நஞ்சைக் கண்டத்தடக்கி யுலகைக் காத்ததுபோலும், காலபாசத்தாற் கட்டுண்ட மார்க்கண்டேயனை எமனிடமிருந்து விடுவித்ததுபோலும் இந்நகரையும் என்னையுங் காத்தருள்" என்று பிரார்த்தித் துக் கண்ணீருடன் கருணையமுதை நாடி நின்றான். தயாநிதி யாம் பகவான் சந்திரசேகரன் தனதன்பனும் அரசனது துயரைக்கண் டிரங்கி, மந்திரிகள்முன்னிலையில் அவனை நோக்கி, "மன்னவ! இப்பாம்பைக்கண்டஞ்சவேண்டாம். நீயும் உன் பிரஜைகளும் அமைதியா யிருங்கள். கடுவேக முற்ற அரவைக் கொன்று உங்கள் அச்சத்தை யகற்று கிறேன்" என்றருளி, மேருவில்லாம் பினாகத்தை யெடுத்து, அம்பைக்கருடாஸ்திரத்துடனிணைத்துத்தொடுத்தெய்தான்.


மஹாதேவனது பெருவில்நாணிலிருந்து புறப்பட்ட அவ்வம்பு காற்றினும் வேகமாய்ப் பாய்ந்து பாம்பரசனுடலைக் கூரிய முனையால் மூன்று கூறாக்கியது. சிவபாணத்தால் வெட்டுற்ற அப்பாம்பு உக்கிர மொழிந்து, பூமியில் விழுந்தது. அதன் முற்பகுதி மதுரைக்கு மேற்கே விழ, வாற்பகுதி புன்னைவனத்தில் வீழ்ந்து, புவனேசனுக்கு மேற்கே மலைவடிவாய் அழகு சிறக்கிறது. பிராமணோத்தமர்களே! இவ்வாறு, பாபத்தைத் துடைப்பதும், ஆயுளையும் நன்மையையும் வளர்ப்பதுமாம் பன்னககிரியின் பாவன கதை நிகழ்த்தப்பெற்றது.

அம்மலை சுழியனுக்கு மேற்கே, அதன் தென்வடல் நீளத்தை யளக்குங் கோலென இன்றுந் திகழ்கிறது. அப் புண்யகிரியில் முனிவர்கள் பார்வதிநாதனது அருளை நாடி ஒருமையுடன், நியமத்தவ மாற்றுகின்றனர். காச்யபர், ஜாபாலி, கௌதமர், அத்ரி முதலாம் அந்தணர்கள் ஆகார நியமத்துடன் அங்கே தவம்புரிகின்றனர். அக்கிரியினுறைபவர் பாபத்தினின்றும் விடுபட்டுச் சிவபெருமானது உயர் வீடுறுவர். அதைத் தரிசித்தமாத்திரத்திலே தீயுற்ற சுள்ளியெனப் பாபங்கள் பொசுங்கிப்போம். இங்ஙனம், கேட்பதால் விரும்பியவற்றை யருள்வதும் தீவினையைத் தீர்ப்பதுமாம் புன்னைவன மான்மியம் உங்களுக்கியம்பப்பெற்றது. அற்புதமிக்க இவ்வரலாற்றைச்செவியுறுபவர் வையகத்தின்பமனைத்தையுந் துய்த்து, முடிவிற் பரசிவபதம் பெறுவர். எவரெவர் எவ்வெந்நலனை நாடுவரோ அவ்வந்நலனையெல்லாம் இதனைக் கேட்பதாற் பெறலாம்.''

இவ்வாறு சூதர், தீர்க்காயுளை யளிக்கும் புவனேச்வர மஹிமையை யுரைத்து, விதிப்படி முனிவர்களை வணங்கிக் கூப்பியகையுடன் பரவசரானார். இப்புண்யமான்மியத்தைக்


கேட்ட நைமிசாரண்ய வாசிகளாம் முனீந்திரர்கள் பெருந்தகையாம் சூதரை உவகைப் பெருக்குடன் தழுவி வழிபட்டனர்.

இங்ஙனம்
ஸ்ரீஸ்காந்த மஹாபுராணத்தில்
க்ஷேத்திரகண்டத்துள்ள
திரிசூலபுர மாகாத்மியம்
முற்றிற்று.



திருச்சுழி
அருப்புக்கோட்டை தாலூகா
இராமநாதபுரம் ஜில்லா (தென்னிந்தியா)
வ.
மதுரை
வைகை
திருப்புவனம்
நதி
சிவகங்கை
திருமங்கலம்
மானாமதுரை
புல்வாயக்கரை
கள்ளிகுடி
காரியாபட்டி
பார்த்திபனூர்
நரிக்குடி
விருதுநகர்
திருச்சுழி
பாலையம்பட்டி
குண்டாறு
அருப்புக் கோட்டை
கல்லூரணி
கமுதி
மண்டபசாலை
முதுகுளத்தூர்
பந்தல்குடி
சாத்தூர்
சாயல்குடி
– குறிப்பு –
ரயில் பாதை
வண்டிப் பாதை (ரோட்)
போட உத்தேசித்துள்ள வண்டிப் பாதை
நதி
ஸ்கேல் 1 அங் = 16 மைல்
மன்னார் வளைகுடா

## சுழியலைச் சுற்றியுள்ள
## மூர்த்தி தீர்த்தங்களைக் குறிக்கும் படம்



# சுந்தரமூர்த்தி நாயனார்

## திருச்சுழியல்

### பண்—நட்டராகம்

### திருச்சிற்றம்பலம்

**ஊ**னாயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனாதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழிய
னானாவித நினைவார்தமை நலியார்நமன் றமரே. ௧

தண்டேர்மழுப் படையான்மழ விடையானெழு கடனஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவ னுறையுந்திருச் சுழியற்
றொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே. ௨

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா
ரவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே. ௩

மலையான்மகள் மடமாதிட மாகத்தவள் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம் பெருமான்றிருச் சுழிய
லலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழாலெடு வானத்துயர் வாரே. ௪

உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே. ௫

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழிய
னிலந்தாங்கிய மலராற்கொழும் புகையானினைந் தேத்துந்
தலந்தாங்கிய புகழாமிகு தவமாஞ்சது ராமே. கூ

சைவத்தசெவ் வுருவன்றிரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றும்மெரி செய்தான்
றெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்றிருச் சுழியன்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே. எ

பூவேந்திய பீடத்தவன் றானும்மட லரியுங்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புக லறியார்
சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியன்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே. அ

கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்விச்
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வானல்வரு விதியே. கூ

நீரூர்தரு நிமலன்றிரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான்றிருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமா
னாரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே. கய

---

சுவாமி - திருமேனிநாதர். அம்மன் - துணைமாலை.

# காளையார்கோயில்

பண் : புறநீர்மை

தொண்ட ரடித்தொழலுஞ் சோதி யிளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்ட ரிகப்பரிசா மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடனஞ் சுண்ட கருத்தமருங்
கொண்ட லெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. க

கூத லிடுஞ்சடையுங் கோளர வும்விரவுங்
கொக்கிற குங்குளிர்மா மத்தமு மொத்தனதா
ளோத லுணர்ந்தடியா ருன்பெரு மைக்குநினைந்
துள்ளுரு காவிரசு மோசையைப் பாடலுநீ
யாத லுணர்ந்தவரோ டன்பு பெருத்தடியே
னங்கையின் மாமலர்கொண் டென்கண தல்லல்கெடக்
காத லுறத்தொழுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. உ

நானுடை மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பத மென்றுணர்வார் சொற்பத மார்சிவனைத்
தேனிடை யின்னமுதை மற்றத னிற்றெளிவைத்
தேவர்க ளுயகனைப் பூவுயர் சென்னியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௩

செற்றவர் முப்புரமன் றட்ட சிலைத்தொழிலார்
சேவக முந்நினைவார் பாவக முந்நெறியுங்
குற்றமி றன்னடியார் கூறு மிசைப்பரிசுங்
கோசிக மும்மறையிற் கோவண மும்மதளு
மற்றிகழ் திண்புயமு மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கையுமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழ லென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௪

கொல்லை விடைக்கழகுங் கோல நறுஞ்சடையிற்
கொத்தல ரும்மிதழித் தொத்து மதனருகே
முல்லை படைத்தநகை மெல்லிய லாளொருபான்
மோக மிகுத்திலகுங் கூறுசெ யொப்பரிசுந்
தில்லை நகர்ப்பொதுவுற் றாடிய சீர்நடமுந்
திண்மழு வுங்கைமிசைக் கூரெரி யும்மடியார்
கல்ல வடப்பரிசுங் காணுவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௫

பண்ணு தலைப்பயனார் பாடலு நீடுதலும்
பங்கய மாதனையார் பத்தியு முத்தியளித்
தெண்ணு தலைப்பெருமா னென்றெழு வாரவர்த
மேசற வும்மிறையா மெந்தையை யும்விரவி
நண்ணு தலைப்படுமா றெங்ஙன மென்றயலே
நைகிற வென்னைமதித் துய்யும் வணம்மருளுங்
கண்ணு தலைக்கனியைக் காண்பது மென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௬

மாவை யுரித்ததள்கொண் டங்க மணிந்தவனை
வஞ்ச மனத்திறையு நெஞ்சணு காதவனை
மூவ ருருத்தனதா மூல முதற்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை யாகமுறப்

பாவக மின்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
பானறு நெய்தயிரைந் தாடு பரம்பரனைக்
காவ லெனக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௭

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளா நீதியை வார்கடனஞ்
சுண்டத னுக்கிறவா தென்று மிருந்தவனை
யூழி படைத்தவனோ டொள்ளரி யும்முணரா
வண்டனை யண்டர்தமக் காகம நூன்மொழியு
மாதினை மேதகுசீ ரோதியை வானவர்தங்
கண்டனை யன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௮

நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
ஞான விளக்கொளியா மூனுயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனையா டோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடு மணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. ௯

கன்னலை யின்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையையொண் சீருறை தண்டமிழா
லுன்னி மனத்தயரா வுள்ளுரு கிப்பரவு
மொண்பொழி னாவலர்கோ னாகிய வாரூரன்
பன்னு மிசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினரா யெத்திசை யும்புகழ
மன்னி யிருப்பவர்கள் வானி னிழிந்திடினு
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே. ௧௦

சுவாமி - காளையப்பர். அம்மன் - மகமாயி.

## மணிவாசகர்

### திருக்கோவையார்

அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியா
ரென்பிடை வந்தமிழ் தூறநின் ருடி யிருஞ்சுழியற்
றன்பெடை நையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே.

திருச்சிற்றம்பலம்

---

## ஸ்ரீ ரமண பகவான்

### பாட்டு

அன்புடை யார்த மகமக லாம லனவரத
மின்புடை யாட்ட மிடலென வென்று மெழிற்சுழியற்
றன்புடை நீங்கா தொளிர்பரஞ் சோதித் தனிச்சிவமே
யென்புடை யன்பிந் திலகிட வென்ற னிருதயமே.

---

## கணபதி முனிவர்

### தேவிஸ்துதி

भवार्दितानां भवतात्सहायः सहायवल्ली करुणाकटाक्षः ।
यत्पातपूतो रमणो महर्षिः परंलुलोके भगवान्गुरुर्नः ॥

எது தம்மேற் படிந்ததாற் பவித்திரராய் எமதுகுரு
பகவான் ரமணமஹர்ஷி பரம்பொருளை சாக்ஷாத்கரித்
தாரோ, ஸஹாயவல்லியின் அக்கருணைகடாக்ஷம் சம்
சார தாப முற்றோர்க்கு சகாயமா யிலகுக.

65612

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1